www.tamilarangam.net

# வேர்கள்

அ ற மு ம் வீ ர மு ம் வெ ல் லு ம்

சிலை 2030 (மார்கழி - 1999) வேர் : 4 மலர் : 4,5 விலை 4 உருபா

## திராவிடம் என்பது சேறும் செத்தையும் நிறைந்த புதைகுழி!

திராவிடத்தின் தரகர்கள்
தமிழ்த் தேச முகமூடியோடு வருவர்!!
அலையும் ஆடுகளல்ல!
சீறும் சிறுத்தைகள் நாம்
என மெய்ப்பித்திடு!!



புத்தம்புதிய சரடு

"தயிரிலிருந்து பால்!"

## திராவிடத்திலிருந்து தமிழ்த் தேசம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடுக வலையில் சாதி அரசியல்!

அண்மையில் உயர்நயன்மை மன்ற நடுவர்களுக்கு நியமனம் பரிந்துரைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட சாதியைச் சார்ந்தவர்கள் குறிப்பாக வன்னியர்கள் யாரும் அதில் இல்லை என்பது குறித்து பா.ம.க.வின் நிறுவனத் தலைவர் மருத்துவர் இராமதாசு எதிர்ப்பு தெரிவித்ததாக செய்திகள் வந்தன. நடுவர்கள் நியமனத்திலும் இடஒதுக்கீடு கேட்கிறார் இராமதாசு.

மருத்துவரின் இவ்வறிவிப்பை இரு முகாம்கள் கடுமையாகத் தாக்கி வருகின்றன. முதலாவதாக திராவிடத் தெலுங்கர் முன்னேற்றக் கழகத்தினர், "தீக்குளிக்கப் போவதாக" அறிவித்துள்ளனர். நீதி மன்றங்களில் இட ஒதுக்கீட்டைப் பின்பற்றினால் நீதி செத்துவிடும் என்று தி.தெ.மு.க.வின் காமாட்சி நாயுடுகாரு செப்பிண்டாரு! எனவே, மருத்துவருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அடுத்து சோ இராமசாமி வயிறு பற்றியெரிந்து நக்கலாகவும், நரகல் நடையிலும் சாடியிருக்கிறார். இனி கிரிக்கெட் விளையாட்டிலும் இட ஒதுக்கீடு கேட்பார் என்ற கிண்டல் வேறு செய்து அட்டைப்படம் வெளியிட்டிருக்கிறார். அந்த மட்டைப் பந்தாட்டத்திலும்கூட சிரிகாந், இரமேசு என்று பார்ப்பனர்கள்தான் புக முடிகிறது என்கிற நடைமுறை சோவின் கண்ணில் படுவதில்லை. அதுவெல்லாம் அவாளோட சாதிப்பற்று!

நீதி வழங்குவதிலுமா இப்படி இடஒதுக்கீடு கேட்கிறார்கள் என்று இவர்களிருவரும் கேட்பதில் இவர்களுக்கு நீதியின் மீதுள்ள தாகமோ தவிப்போ கிடையாது. இடஒதுக்கீடு இத்தனை காலமும் நடைமுறையில்தான் இருந்தது? ஆனால் அது தலைகீழாக நடைமுறையிலிருந்தது. அதாவது, எடுத்துக்காட்டிற்கு சென்னை உயர்நயன்மை மன்றத்தினுள் நுழைந்தால், மந்திரம் ஓதவே படைக்கப்பட்ட பண்டாரங்களெல்லாம் கருப்புக் குப்பாயம் போட்டுக் கொண்டு நாயாய் பேயாய் எங்கும் அலைவதைப் பார்க்கலாம். அதையும் மிஞ்சி நாயுடுகாருகளும் ரெட்டிகாருகளும் எல்லா இடங்களிலும் தெலுகில் செப்போ செப்பு என்று செப்புவதைக் கேட்கலாம். தமிழர்களின் தலைநகரில் உள்ள நயன்மை மன்றத்தில் எல்லா இடங்களையும் இவர்கள் எப்படிப் புகுந்தார்கள்?

உயர்நயன்மை மன்றத்திலுள்ள நடுவர்களின் பட்டியலையும் நாம் காணவேண்டும். அதே உச்சிக்குடுமி, மனவாடு வகையராக்கள்தான் நீக்கமற நிறைந்துள்ளன! எந்த இட ஒதுக்கீடு அடிப்படையில் இவர்கள் இந்த இடங்களை நிரப்பினார்கள்? தகுதி அடிப்படையிலா?

தெலுங்கு, பார்ப்பன ஊதுகுழல்களாக இருக்கும் தி.தெ.மு.க. வும் சோ இராமசாமியும் மருத்துவர் மீது சாடுகிறார்கள் என்பது இப்போது வியப்பளிக்காது இல்லையா?

சரி, மருத்துவர் வன்னியர்களுக்காக வரிந்து கட்டிக் கொண்டு இறங்கியிருப்பது புரிந்து கொள்ளக்கூடியது என்றாலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. தமிழ்ச் சாதிகளை கூறு போட்டுத்தான் வடுகர்கள் இந்த மண்ணில் கோலோச்சியிருக்கிறார்கள். இன்னும் தங்கள் ஆட்சியைத் தக்க வைத்திருக்கிறார்கள். வடதமிழ்நாட்டில் தமிழரான பறையருக்கும் தமிழரான வன்னியருக்கும் வழிவழியாக வந்த பகையின் வேர் எங்கே உள்ளது? வடுகச் சூழ்ச்சிதான் கரணியம்! தென் தமிழகத்தில் தமிழரான பள்ளருக்கும், தமிழரான மறவருக்கும் நீண்டகாலப் பகையின் வரலாறு என்ன? அதே வடுகக் கயமைதான். இதைப் புரியாது மீண்டும் மீண்டும் சாதி வலையில் வீழ்வது அறிவாண்மையையும் காட்டவில்லை, அரசியல் முதிர்ச்சியையும் காட்டவில்லை.

வாக்குப் பொறுக்கி அரசியலில் சாதித் தீயில்தான் குளிர்காயலாம் என்கிற எண்ணமும் செயலும் ஒட்டு மொத்தத் தமிழகத்தின் வாழ்வுக்கும் விடுதலைக்கும் வைக்கிற வேட்டுதான் என்பதைச் சுட்டிக்காட்டுவது எமது கடமை என்றே கருதுகிறோம்.

வாக்குப் பொறுக்கி அரசியலில் ஏற்கெனவே குதித்துவிட்ட, குதித்துக் கொண்டிருக்கிற "புரட்சியாளர்களெல்லாம்" குறைந்தபட்சம் தமிழக வரலாற்றில் வடுகக் கயமை குறித்த ஒருசில அடிப்படை வரலாற்றுப் பாடங்களையாவது கற்க வேண்டும். இல்லையெனில் நிழல்களைக் குத்திக்கொண்டே நீங்கள் நின்று போவீர்கள்!



www.tamilarangam.net

# வணக்கம்

இந்த இதழ் இரு மாத இடைவெளிக்குப் பின்பாக உங்கள் கைகளில் கிடைக்கிறது. பொறுத்துக்கொள்க! பொருளியல் நெருக்கடி காரணமாக கடந்த திங்களின் இதழை அச்சிட இயலவில்லை. இதழ் தொய்வின்றி வெளிவர உறுப்பினர்கள் செயல்படுக. நிலுவைகளைச் செலுத்துக. புதிய உறுப்பினர்களைத் தேடுங்கள். நன்கொடை தருக., தமிழின விடுதலைக்காக நாங்கள் ஏற்றுக்கொள்ளும் எண்ணற்ற இடர்களில் சிலவற்றை யேனும் நீங்கள் ஏற்றுக்கொள்ள முன்வாருங்கள். இணைந்து நாம் முனைந்தால் விடியும் காலத்தை விரைவில் நாம் சந்திக்கலாம். முனைந்து செயலாற்றுக.

## *தமிழர் பெருவிழா!*

கடந்த அக்டோபர் 31, ஞாயிறு மாலையில் தமிழர் பெருவிழா திருச்சியில் சிறப்புற நடைபெற்றது. காரைக்குடி தமிழ்ச் செல்வன் தலைமையேற்று தமிழர் எழுச்சிப் பேரணியைத் தொடங்கி வைத்தார். தமிழகமெங்குமிருந்து வந்து பங்கேற்ற இளையோரும், பெண்களும் அவ்வெழுச்சிப் பேரணியில் ஓர்மை பொங்கப் பங்கேற்றது தமிழ் எதிரிகளின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும் என்பது திண்ணம். பேரணியின் இறுதியில் நடந்த கருத்தரங்கு, கலைநிகழ்ச்சிகள் வீரத்தையும் வேகத்தையும் விதைத்தன. திரு. குணா அவர்கள் அந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றார்கள். குணா அவர்களின் தலைமை உரை இந்த இதழில் அச்சாகிறது. கோவை ஞானி, பூ.அர.குப்புசாமி, இளங்குமரனார், மாலதி, மிசா மாரிமுத்து, ஆகியோர் உரையாற்றினர். தமிழர்களத்தின் கலைக்குழுவினர் வந்தேறி அரசியலின் முகத்திரையைக் கிழிக்கும் வண்ணம் எழுச்சிமிகு கலைநிகழ்ச்சிகளை நடத்தினர்.

## *இருப்பதைக் காப்போம் இழந்ததை மீட்போம்*

கடந்த சில ஆண்டுகளாக தமிழ்ச் சான்றோர் பேரவையினர் தமிழகப் பெருவிழா என்கிற பெயரில் நவம்பர் ஒன்றாம் நாள் விழாவொன்றினை எடுத்து வருகின்றனர். இந்த ஆண்டு அவ்விழா தஞ்சையில் நடந்தேறியது. நவம்பர் ஒன்று, 1956இல் தமிழகம் மொழிவழி மாநிலமாகப் பிரிந்ததைக் கொண்டாடும் நாளாக இதை அறிவிக்கிறார்கள். ஆனால் 1956 நவம்பர் ஒன்றாம் நாள், நாம் நமது எல்லைகளை கன்னடரிடமும், மலையாளிகளிடமும், தெலுங்கரிடமும் இழந்தோம் என்பதுதானே உண்மை! அவர்களுக்கு வரவு! நமக்கு இழப்பு!!

திராவிடக் கயமையினால் மண்ணை இழந்த நாளை எப்படிக் கொண்டாட முடியும்? மூன்று மாநிலத்தவரும் கொண்டாடுகின்றனர், நாம் மட்டும்தான் கொண்டாடவில்லை என்று விளக்கம் வேறு அளிக்கிறார்கள். கொன்றவன் கொண்டாடுகிறான் என்றால் அதைப் பார்த்து கொலையுண்டவன் வீட்டுக்காரர்களும் எழுந்து ஆட வேண்டும் என்கிற விளக்கம்தான் அது! இருப்பதைக் காக்க வேண்டும் இழந்ததை மீட்க வேண்டும் என்று போர்ப்பாடம் சொல்லிக் கொடுப்பதை விட்டுவிட்டு கொலைகாரனோடு சேர்ந்து கூத்தாடு என்றால் என்ன பொருள்!

ஆண்டவன் சொல்றான் அருணாச்சலம் செய்றான் என்ற கூத்து போல அருணாச்சலம் சொல்றார் "சான்றோரெல்லாம்" செய்றார் என்கிற பாணியில்தான் தமிழகப் பெருவிழாக் கொண்டாட்டங்கள் நடக்கின்றன. தெலுங்கர்களுக்கு மேடை அமைத்துக் கொடுப்பதும் செத்துப் போன திராவிட அரசியலுக்கு ஊதி ஊதி உயிர் கொடுக்கிற முயற்சியுமே அங்கு நடைபெற்று வருகிறது. திராவிடம் ஒழிய வேண்டும் என்று தமிழரெல்லாம் இன்று பட்டறிவுப்பாடமும், வரலாற்றுப் பாடமும் கற்றுக் கொள்கிற வேளையில், திராவிடத்தின் வழியாகத்தான் தமிழ்த்தேசியம் அடைய இயலும் என்று காது குத்துகிறார் திரு. அருணாச்சலம் அவர்கள்.

## *நமக்கு இது எழுச்சி நாள்!*

தமிழர்களம் முன்னெடுக்கும் தமிழர் பெருவிழா தமிழினத்தின் விடுதலையை மையப்படுத்துகிறது. வந்தேறி திராவிட அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைகிறது. போலித் தலைமை வழிபாட்டை உடைத்தெறிய முற்படுகிறது. தமிழர் நடுவில் தன்னம்பிக்கையை விதைக்கிறது. இழந்த மண்ணை மீட்பது, தமிழ் மண்ணைச் சுரண்டும் வந்தேறிகளை விரட்டியடிப்பது என்பவைகளை எண்ணத்திலும் நடைமுறையிலும் இலக்குகளாகக் கொண்டுள்ளது. எனவே இந்த நாள், கடந்ததைக் கண்டு கூத்தாடும் நாளல்ல! எழுச்சியை விதைத்து எதிர்வரும் காலத்தை உருவாக்க எழுகின்ற நாள்.



திராவிடச் சவத்தைத் தூக்கிச் சுமக்கும் ஓரிருவர் கையில் அப்பேரவை இன்று சிக்கிக் கிடந்தாலும் பல தமிழ் நல்லுள்ளங்கள் நம்பிக்கையோடு இதில் பங்கேற்கின்றன என்பதுதான் உண்மை. தி.மு.க.வின் தொடக்ககாலத்தில் எப்படி எண்ணற்ற தமிழ் ஓர்மையாளர்கள் அதை ஒரு கலங்கரை விளக்காக முன்பு நம்பி, பின்பு அது கானல் நீர் என்று எப்படி உணர்ந்து கொண்டார்களோ அதுபோலவே ஒரு கானல் நீர் கண்சிமிட்டுகிறது. பளபளப்பும் பசையும் விடுதலைத் தாகத்தைத் தீர்த்ததாக வரலாறு கிடையாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இராசீவ் செத்த வழக்கு.

இந்திராகாந்தியைக் கொன்றார்கள். ஒரு ஆணையம் போட்டு உசாவினார்கள். இந்திராகாந்தியைக் கொல்வதற்குப் பயன்படுத்திய ஒரு கைத்துப்பாக்கியை ஒரு இத்தாலிக்காரியின் பெயரில் வாங்கியது கண்டுபிடிக்கப்பட்டதாம். அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தின் முன்பு முறைப்படி வைக்காமலேயே நகர்த்திவிட்டார்கள். நகர்வாலாவின் கதையை இந்திராகாந்தி முடித்தார். இராசீவ் காந்தி சீக்கியர்கள் கொலையில் கண்ணை மூடிக் கொண்டார், ஈழத்துக்கு அமைதிப் படையை அனுப்பி தமிழர்களைக் கொன்று குவித்தார்.

அப்படிப்பட்ட இந்திராகாந்தியை கடந்த ஆயிரம் ஆண்டில் வந்த மிகச்சிறந்த பெண்மணி என்று பி.பி.சி. செய்தி நிறுவனம் வாக்கெடுப்பு நடத்தி அறிவித்துவிட்டது. நகர்வாலாவின் ஆவி என்ன சொல்லும்? வெள்ளைக்காரி சோனியா திடீரென "அன்னை சோனியா"வாகிறார்! அவரது மாமியாரின் ஆவிதான் என்ன சொல்லும்? மாபெரும் தலைவர் இராசீவ் என்றால் கொல்லப்பட்ட ஈழத்தமிழர்களின் ஆவிகள் என்ன சொல்லும்?

உயரத்தில் இருப்பவன், இருப்பவள் செய்தால் அரசியலில் இதுவெல்லாம் சாதாரணம் என்று உச்சிக்குடுமி சாணக்கியர்கள் சப்பைக்கட்டுவார்கள். தகரிகளை (பீரங்கிகளை) விழுங்கிய ஊழல் நாயகன் இராபர்டோ என்கிற இராசீவ், தெற்காசிய உதிரியாக தான் உயர வேண்டும் என நாக்கைச் சப்பிக் கொண்டிருந்தார். அவரது தம்பி "கட்டிங் பிளேயர்" சஞ்சய்காந்தி செத்ததுவரை காதல்மோதலில் கப்பல்விட்டுக் கொண்டிருந்த அவர் தாயின் கட்டாயத்தினால் அரசியல் வானில் வலிந்து திணிக்கப்பட்டார். நாடாளுமன்றத்தில் சீட்டியடிப்பது, இருக்கைகள் மீது ஏறி ஆடுவது போன்ற "உயர்ந்த" அரசியல் நாகரிகத்தை ஆசிய சோதியின் பேரன் கற்றுக் கொண்டு வந்தார். தாயார் செத்து விழுந்ததும் குப்பாயம் மாட்டிக் கொண்டு தெற்காசியக் காடையாக உருவெடுத்தார்.

தமிழ்ப் புலிகளை ஒடுக்கும் கனவோடு தமிழீழ மண்ணில் படைச் சரக்குகளை களம் இறக்கினார். தமிழர்கள் சொல்லொண்ணா துயருக்கு உள்ளானார்கள். ஒடுக்குண்ட மக்களின் காயங்களில் எரிநீரை ஊற்றினார். தாய்மாரையும், தங்கைகளையும் நடுத்தெருவில் கொத்தித் தின்றக் கொடுமையை கண்ணுற்ற தமிழர்கள் துடித்தெழுந்தனர். ஒரு ஈழத்துக் கண்ணகி காஞ்சிக்கு அருகில், மீண்டும் தீயால் சுட்டாள். பொட்டென்று போனது அவர் உயிர்! கிழிந்து கிடந்த இராசீவின் உடலைப் படமாக சுவரொட்டி போட்டு வாக்குப் பொறுக்கினர். மீண்டும் ஆட்சி சுகம் கண்டனர் பேராயக்கட்சியினர்.

பசித்திருப்பவன் பணம் வைத்திருப்பவனால் கொள்ளையடிக்கப்பட்டவன். பசித்தவன் திருடுவது ஒருவகையில் இழந்ததை மீட்பதுதான்! ஆனால் அவன் பத்து உருபாவை "மீட்டாலும்" அதற்குப் பலவிதமான தண்டனை, அடி உதை! அர்சத் மேத்தா திருடினால், வழக்கறிஞர்கள் திருடினால், மருத்துவர்கள் திருடினால், இராசீவ்காந்தி திருடினால் அது நாகரிகப் போர்வையில் சேவைகளாகிவிடுகிறது! இராசீவும், இந்திராவும், அத்வானியும் செய்தால் அது அரசியல்! தணுவும், நளினியும் செய்தால் அது பயங்கரவாதம். போலி மக்களாட்சித் தத்துவத்தின் மடமை, இதுதான்! காவல்துறைச் சீருடையில் செய்தால் கடமை! போராளி நாட்டுக்காகச் செய்தால் பயங்கரவாதம். கோபால கிருட்டிண நாயுடு கீழ் வெண்மணியில் 44 பேரை உயிரோடு எரித்துக் கொன்றது சாதாரணம். அவனை வெட்டி வீழ்த்தியது பயங்கரவாதம்! இது எப்படி ஞாயமாகும்?

எப்படி 44 தமிழர்களைக் கொன்ற ஒரு கோபால கிருட்டிண நாயுடு செத்தொழிய வேண்டும் என்று அன்று கொல்லப்பட்ட அம்மக்களின் பிள்ளைகளும் பெற்றோர்களும் விரும்பியிருப்பார்களோ அதுபோன்றே தன் மக்களைக் கொல்லக் காரணமாக இருந்த இராசீவும் மறைய வேண்டும் என்று பல தமிழ் உள்ளங்கள் அன்று கதறியிருக்கும். கணவனுக்காக பழிதீர்த்த ஒரு கண்ணகிக்கு கோட்டமும் சிலையும் வடிக்கிற ஞாயத்தைப் புரிந்து கொள்கிற சிலருக்கு சமகாலத்தில் கொடியவர்கள் உதிர்வதைப் புரிய மறுக்கிறார்கள்.



இராசீவ் வழக்கைக் காரணம் காட்டி நான்கு தமிழர்களைச் சாகடிக்கப் போகிறார்கள் என்பதில் மாந்த ஞாயம் இல்லை. சட்டப்படியும் அது ஞாயமாகாது. பின் ஏன் கொல்ல முனைகிறார்கள்? தமிழர்களை அச்சுறுத்த இது ஒரு வழி என்று அரசியலார் பலர் கருதுகின்றனர்.

இதற்கிடையில் கருணாநிதியும் மரணதண்டனையை எதிர்க்கிறார் என்று சில தமிழ் அமைப்புக்கள் சென்னையில் ஊர்வலம் போய் பாராட்டியிருக்கிறார்கள். கடைந்தெடுத்த கயமைத்தனம் இது! கருணாநிதி, "தான் சொன்ன கருத்து இராசீவ் கொலை வழக்கில் பொருந்தாது!" என்றே தெளிவுபடுத்தியிருக்கிறார். உயர்நீதி மன்றத்தில் 26 பேருக்கு நடுவர் நவநீதம் தூக்குத் தண்டனை அளித்தபோது திமுகவினர் அதில் இல்லை என்று மகிழ்ந்து 26 பேரின் தூக்குத் தண்டனையையும் ஞாயப்படுத்தியவரே அவர். செயலலிதா, சோ, மாலன் போன்ற சிலரும் அதை வரவேற்றனர் என்பதை மறந்திடக்கூடாது.

எப்படியாவது இந்த நான்கு பேரையும் காப்பாற்றிவிட வேண்டும் என்கிற எண்ணமும் ஓர்மையும் எல்லா தமிழர்களுக்கும் இருக்கிறது. எமக்கும் அவ்வெதிர்பார்ப்பு இருக்கிறது. அதே வேளையில் ஞாயத்தையும், உண்மையையும் கொன்று அல்லது மறைத்து நான்கு பேரையும் காப்பாற்றிவிடுவது என்பது நீண்டகாலத்தில் பயனளிக்காது.

மரணதண்டனைக்குத் தூக்கு போடவேண்டும்! என்கிற குரலும் இப்போது நாடெங்கிலும் எழுந்து வருகிறது. நளினி உட்பட நான்கு தமிழர்கள் சாவின் பிடியில் தவிக்கும்போதுதான் நமக்கே இது தைத்திருக்கிறது.

www.tamilarangam.net

நீண்ட உசாவல்கள், நீதி மன்ற வாயில்கள், சிறைக் கொட்டடிகள், தூக்குக் கயிறுகள் ஆகியவற்றின் வழியாக மட்டும் கொலைகள் இந்நாட்டில் நடக்கவில்லை! ஆனால் அது மட்டுமே நம் கண்களுக்குத் தெரிகிறது.

கர்நாடக அதிரடிப்படை கொன்ற தமிழர்கள்!, இராமேசுவரத்தில் கொல்லப்பட்டுவரும் தமிழர்கள்!, கர்நாடகத்தில் கன்னடர்கள் கொன்ற தமிழர்கள்!, சிறைச்சாலைகளில் கொல்லப்படுகிறவர்கள், நடுக்கடலில் கொல்லப்பட்ட கிட்டு போன்றவர்கள், ஈழத்தில் கொல்லப்பட்ட மாத்தையா போன்றவர்கள், சென்னையில் கொல்லப்பட்ட பத்மநாபா போன்றவர்கள், இன்னும் வெளியே தெரியாத எத்தனையோ கொலைகள் உள்ளன. இப்போது நான்கு தமிழர்களை மீட்டபின்பு நாம் அமைதி காத்துவிட்டோம் என்றால் நாம் மாந்த நேயத்திற்காகப் போராடவில்லை என்பதே பொருளாகிவிடும்.

தற்காப்புக்காகவும், பிரிதொரு மாந்த உயிரைக் காப்பதற்காகவும் அன்றி நிகழ்த்தப்படும் சாவுகளெல்லாம் தடுக்கப்படவேண்டிய கொலைகளே!

## தமிழ் வழிக்கல்வி.

கர்நாடகத்தில் ஐந்தாம் வகுப்புவரை கன்னடம் மட்டுமே பயிற்று மொழி. அதுவரை ஆங்கிலம் அறவே கூடாது. இனமானம் உள்ளவர்கள் வாழ்கிற அந்த நாட்டில் அது குறித்துப் பெருமைப்படுகிறார்கள். எட்டாம் வகுப்பு வரை கன்னடம் மட்டுமே பயிற்று மொழி! ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்கலாம்.

ஆந்திரம், கேரளா எல்லாம் இப்போது அதைப் பின்பற்றி வெற்றி காண்கின்றன.

தமிழ்நாட்டிலோ ஒட்டுமொத்தச் சொதப்பல் நடக்கிறது. தமிழர்களின் தாயகத்தில் தமிழ் மொழிக்காக தெருவிறங்கிப் போராடும் அவலம் முதலில் ஏற்பட்டது. ஐவர் குழு போட்டு ஆய்வோ ஆய்வென்று ஆய்ந்தார்கள். தேர்தல் முடிந்து அறிவிக்கிறேன் என்றார் கருணாநிதி., இறுதியில் எருமைமாட்டு வேகத்தில் ஒரு அரசு ஆணை வந்துள்ளது. தமிழர்களுக்கு எதிரான ஒரு திராவிட அரசை இந்தப் பாடுபட்டு அசைத்து இதுவரை நகர்த்தியிருப்பது பாராட்டுதலுக்குரியது. அமைச்சரவையிலுள்ள சில அமைச்சர்களுடைய துணைத்தரவில் ஏராளமான ஆங்கிலவழிக் கல்விக் கடைகள் உள்ளன. அவர்களில் தொடர் அழுத்தத்தையும் மீறி இப்படியாவது ஒரு ஆணை வந்துள்ளது.

அ. பயிற்று மொழியாக தமிழ் அல்லது தாய் மொழி என்கிறது அவ்வறிக்கை. பிற மாநிலங்களில் அம்மாநில மொழியேதான் கட்டாயமாகிறது.

### தமிழ்நாட்டில் பிற மொழிப் பள்ளிகளின் எண்ணிக்கை.

**தெலுங்கு**

ஆரம்பப் பள்ளி 382
நடுநிலைப்பள்ளி 37
உயர்நிலைப்பள்ளி 19
மேநிலைப்பள்ளி 9

**உருது**

ஆரம்பப் பள்ளி 238
நடுநிலைப்பள்ளி 16
உயர்நிலைப்பள்ளி 8
மேநிலைப்பள்ளி 5

**கன்னடம்**

ஆரம்பப் பள்ளி 45
நடுநிலைப்பள்ளி 9
உயர்நிலைப்பள்ளி 1

**மலையாளம்**

ஆரம்பப் பள்ளி 26
நடுநிலைப்பள்ளி 3
உயர்நிலைப்பள்ளி 9
மேநிலைப்பள்ளி 2

2. இந்த அரசு ஆணையை 3 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றும்படி அரசு, பள்ளிகளைப் பணிக்கிறது. நஞ்சு திண்பதை 3 ஆண்டுகளுக்குள் நிறுத்து என்பது போலாகிறது இச் சலுகை. பொது இடங்களில் புகை பிடிப்பதை தடுப்பது, பரிசுச் சீட்டை தமிழகத்தினுள் தடுப்பது, மார்வாடிகளால் நடத்தப்படும் குட்கா, பான் மசாலா போன்ற நச்சுப் பொருட்களைத் தடுப்பது, ஆங்கில நச்சை தடுப்பது என்று எல்லாவற்றிலும் அரசுக்குத் தடுமாற்றம்தான். நஞ்சையும், போதை மருந்துகளையும் புகட்டி தமிழனை மயக்க நிலையில் வைத்திருப்பதே இவர்களின் நிரந்தர எண்ணம்.

3. தமிழர்களின் தாயகத்தில் தமிழ் மொழி வழிக் கல்விக்கு வழியில்லாத இழி நிலை மெல்ல அகன்று தமிழர்களுக்கும், தமிழுக்கும் நல்லகாலம் வந்துவிட்டதோ என்று ஒரு சூழல் முகிழ்கிற வேளையில் ஆங்கிலப் பள்ளி நடத்தும் "ஆங்கிலக் கடை வணிகர்கள்" ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்து தங்கள் வீரத்தை வெளிப்படுத்திவிட்டார்கள். இவர்கள் நம் மக்களை நேசிக்கிற நல்லவர்களில்லை. மக்களின் இயலாமையையும், அறியாமையையும் பயன்படுத்தி அவர்களைச் சுரண்டிச் சம்பாதிக்க நினைக்கும் கொடியவர்கள் இவர்கள். சாராயக்கடை நடத்துபவர்கள், பரத்தையர் விடுதி நடத்துபவர்கள் பட்டியலில்தான் ஆங்கில வழிக் கல்விக் கூடங்கள் நடத்துபவர்களை வைக்க வேண்டும்! குமுகத்தைப் பீடித்துள்ள புற்றுநோய்க் கிருமிகள் இவர்கள்!

தாய்தான் தன் பிள்ளைகளின் முதல் ஆசிரியர். எண்ணற்ற சொற்களை அவள்தான் முதலில் தன் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கிறாள். பள்ளிக்கூடத்திற்குப் போகு முன்னரே ஒரு குழந்தை ஆயிரக்கணக்கான சொற்களைக் கற்றுக் கொள்கின்றன. பள்ளியில் அவைகள் முறைப்படுத்தப்படுகின்றன. எழுத்துகளும், இலக்கணமும் கற்பிக்கப்படுகின்றன. அவ்வளவுதான். இயல்பாகக் கற்றுக்கொண்ட இவைகள்தான் ஒரு குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு அடித்தளம். ஆங்கிலக்கூடங்கள் முதலில் அந்த அடித்தளத்தை உடைத்துவிட்டு அந்தரத்தில் வீடு கட்டுகின்றன. பிள்ளைகளின் சிந்தனைத் திறனை மழுங்கடிக்கின்றன. இந்த அறிவியல் விளக்கத்தை உலக மாந்தர் அனைவரும் புரிந்து கொண்டுள்ளனர். ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்திய உச்ச நயன்மை மன்றமும் இதைப் பரிந்துரைக்கிறது.

www.tamilarangam.net

தமிழக அரசு தமிழர் இயக்கங்களின் தொடர் அழுத்தத்திற்குப் பின்னர்தான் தட்டுத்தடுமாறி ஒரு அரசாணையை வெளியிடுகிறது. இதைக்கூட தடுத்து நிறுத்த முனைகிறவர்களுக்கு என்ன பின்புலம் இருக்க வேண்டும்?

**தனியார் பள்ளிகள் சார்பில்**

**கருணாநிதியிடம் ரூ.1.40 லட்சம் நிதி**

**சற்குணபாண்டியன் வழங்கினார்**

சென்னை, ஜூலை 23- தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் சங்கம், மழலையர் பள்ளிகள் சங்கம் சார்பில் முதலமைச்சர் கருணாநிதியிடம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாயை காரில் நிதியாக அமைச்சர் சற்குணபாண்டியன் வழங்கி...

கன்னடப் பார்ப்பனரான சோ இராமசாமி உள்ளிட்ட சில தமிழின எதிரிகள் கயமை நிறைந்த நெஞ்சோடு இவ்வரசு ஆணையை எதிர்க்கின்றனர். தமிழர்கள் வெளிநாட்டவரோடு எப்படிப் பேசுவா? இந்தி நாட்டில் போய் எப்படி வேலை பார்ப்பார்கள்? என்று முட்டாள்தனத்தை வடிகட்டி எழுதுகிறார்கள். இந்தி நாட்டிலும், வேறு நாடுகளிலும் எத்தனை பேர்கள் போய் வேலை பார்க்கிறார்கள்? இந்தி நாட்டுக்குள் எத்தனை பேர் இன்னும் வேலையில்லாமல் கிடக்கிறார்கள்? ஆங்கிலம் தெரிந்தால் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் போகலாம். உலகில் இந்த இரு நாடுகள் மட்டும்தான் உள்ளனவா? வேலை ஒரு நாட்டில் கிடைக்கிறது அல்லது கிடைக்க வேண்டும் என்றால் அந்த நாட்டின் மொழியைக் அவர் கற்றுக் கொள்ளட்டும். இன்று வளைகுடா நாடுகளில் ஏராளமான தமிழர்கள் உள்ளனர். அவர்களுக்காக இங்கே எல்லா பள்ளிக்கூடங்களிலும் அரேபிய மொழியா கற்றுக் கொடுக்க முடியும்? இப்படி வெளிநாடுகளுக்கும் போகிற மிகச் சிலருக்காக ஒட்டுமொத்தமாக எல்லாரும் ஆங்கிலம்தான் படிக்க வேண்டுமா?

இந்தச் சிக்கல்களுக்கெல்லாம் விரைவாக தீர்வு எட்ட நல்ல ஒரு வழி உள்ளது. "தமிழில் படித்தவருக்கே தமிழகத்தில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை!" என்று அரசு அறிவித்துவிட வேண்டும். ஆங்கில வணிகர்களின் போராட்டத்திற்குப் பட்டென பாடை கட்டிவிடலாம்.

திரு. ஆதவன் சேதுவராயன் அவர்கள் "தமிழுரிமை: தி.மு.கழகமும் பட்டினிப்போரும்" என்ற தலைப்பில் சிறியதொரு நூலினை வெளியிட்டுள்ளார். 10 உருபா அதன் விலை. படித்துப் பயன் பெறுங்கள்.

தமிழி பதிப்பகம்,
பழக்காரனூர்,
கணக்கப்பட்டி அஞ்.
நங்கவள்ளி (வழி) சேலம் மா. 636454
என்ற முகவரியில் புத்தகம் கிடைக்கும்.

## *சியாட்டில் நாடகம்!*

வணிகத்தின் வழி நாடு பிடிப்பது! இதுதான் மேற்கத்திய நாடுகள் குறிப்பாக அமெரிக்கா இன்று உலக அரங்கில் நடத்திவரும் களவாணித்தனம். உலக நாடுகளின் சந்தைக்கு நாயைப் போல நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலைந்த அமெரிக்கா இரண்டாம் மற்றும் மூன்றாம் உலக நாடுகளை தனது வலையில் சிக்க வைத்துவிட்டது. பசியையும், உணவையும் ஆயுதமாகப் பயன்படுத்தி நாடுகளையே இன்று அடகு பிடித்துவிட்டது.

வளரும் நாடுகளின் வளங்களெல்லாம் இன்று அமெரிக்காவை நோக்கி ஓடிப்பாயும்படி திருப்பிவிட்டனர். 1986இல் உருகுவே சுற்றுப் பேச்சுகளில் ஆரம்பித்து ஏறத்தாழ 1995 மட்டில் பல நாடுகளை காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைத்தது. சீனா மறுத்தது. இந்தியா ஒரு அடிமையைப் போல சென்று கையெழுத்திட்டது. பொருட்கள், பணிகளும் தங்குதடையின் பரிமாறப்பட வேண்டும். இது மேல் பூச்சு. உண்மைப் பொருள் என்னவென்றால் எனது நாடும் நிறுவனங்களும் உற்பத்தி செய்யும் பொருட்களை நீ விலை கொடுத்து வாங்க வேண்டும், உன் நாட்டில் மலிவாகக் கிடைக்கு உழைப்பை தங்கு தடையின்றி நான் பெற வேண்டும். மூன்றாவதாக உரிமங்கள் என்ற பெயரில் உலகின் இயற்கை, அறிவு, ஆற்றல் வளங்களை தனதாக்க வேண்டும்.

இப்போது அமெரிகாவிலுள்ள சியாட்டில் நகரில் உலக வணிக அவையின் கூட்டத்தில் 135 நாடுகளின் பகராளிகள் பங்கேற்றனர். அமெரிக்கா உலக நாடுகளில் மலிவாகக் கிடைக்கும் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுவது எப்படி என்பதிலேயே குறியாக இருந்தது. ஆனால் அமெரிக்காவின் இச்சூழ்ச்சியைப் பலர் புரிந்து கொண்டாலும் எதிர்த்துப் பேச அங்கே ஆட்கள் இல்லை. கிளின்டன் உரையாற்றும் போது, "உலக வணிக அவையின் சட்டதிட்டங்களை மீறும் நாடுகள் மீது பொருளாதாரத்தடை விதிக்கப் போகிறோம்" என்கிற பாணியில் திமிரோடு பேச அமெரிக்காவின் உள்ளார்ந்த எண்ணம் அம்பலத்தில் உடைபட்டுப் போனது. பின்னர் அமெரிக்கப் பகராளிகள் எப்படியெல்லாமோ பூசி மெழுக முயற்சித்தும் அது இறுதியில் தோல்வியில் முடிந்தது.

உழைக்கிற மக்களின் வாழ்வுக்கு உலை வைக்க எந்த ஆண்டையும் தயங்குவதில்லை. உலக அரங்கில் அமெரிக்கா எதைச் செய்கிறதோ அதையே இந்திய வல்லாதிக்க அரசு அடைபட்டுக்கிடக்கும் தேசிய இனங்களின் மீது திணிக்கிறது. தேசிய விடுதலை வினைப்பாட்டின் போது, உலக அரங்கிலும் உள்நாட்டு அரங்கிலும் நிகழும் இச்சுரண்டல் அமைப்புக்களை அடையாளம் காண்பது அவசியம்.

## இதழ் தொடர்பாக...

இதழுக்கு ஆண்டுக்கட்டணம் செலுத்துபவர்கள் தெளிவாக உங்கள் முகவரியைக் குறிப்பிடுங்கள். உறுப்பினர் எண் இருக்குமானால் அதையும் தெரிவியுங்கள். புதிய உறுப்பினர் கட்டணமா அல்லது புதுப்பிக்கப்படுகிறதா என்பதைக் குறிப்பிடுங்கள். (ஆசிரியர் குழு)

www.tamilarangam.net

# இழவுநாள் உரிமைநாளானது!

**31.10.1999 அன்று திருச்சியில் நடந்த தமிழர் பெருவிழாவில் குணா ஆற்றிய தலைமையுரை**

நவம்பர் 1, 1956 — தமிழரின் இழவுநாள் — துயரநாள். கன்னட வடுகனும் தெலுங்கு வடுகனும் மலையாளத்தானும் தமிழரினத்தின் வழிவழிவந்த மண்ணைக் கூரிட்டு வாரிக் கட்டிக்கொண்டு போன அவலநாள்! நவம்பர் 1 வந்தால், அண்டை அயல் மாநிலங்களில் கூத்தும் கொண்டாட்டமும்தான்! தமிழகம் இழந்த எல்லைப் பகுதிகளில் வாழும் கருநாடகத் தமிழரைத் தூற்றவும் அரட்டவும் மிரட்டவும் என்றே கன்னட வெறியர்கள் ஆர்ப்பரிக்கும் நாள்! நவம்பர் திங்கள் முழுவதும் அவர்களுக்கு ஒரே வெறியாட்டுத் தான் போங்களேன்!

அரசியலில் ஏற்றம் பெற நல்ல கொழு கொம்பைத் தேடிவரும் காசு படைத்த சிலர் மூன்று நான்கு ஆண்டுகளாக நவம்பர் 1 அன்று விழவெடுத்து வருகின்றனர். காசைக் காட்டினால், ஆடுவதற்கு ஆள் அங்கே. வடுகப் பெருந்தலைகளின் திராவிட ஓலங்களும் தெகிடுதத்தங்களும் அங்கு கட்டாயம் இருக்கும்.

ஆனால், ....

வழிவழி வந்த காவிரி ஆற்றுரிமையைக் காக்கவும் — கன்னட வடுக வஞ்சகத்தை அம்பலப்படுத்தவும் — தனியே நின்று போராடி வரும் பெரியவர் பூ. அர. குப்புசாமி இங்கே..... வந்தேறிகள் போக எஞ்சிய 5 கோடித் தமிழகத் தமிழர்கள் அடித்துப் போட்டதைப்போல் தூங்கிக் கொண்டிருக்கையில் — கன்னட வடுகரால் தமிழ்நாடே மெல்ல பாலைநிலமாகக் கெட்டுப் பாழாகி வருகையில் — முதுமையும் நோயும் ஓயாது வருத்தியபோதும், காவிரி ஆற்றுரிமைக்காகவென்றே எண்ணியும் இயங்கியும் வரும் காவிரிகாத்தான் இங்கே ....

சுடர் வீசும் அறிவுக்கதிரை — மொழி ஞாயிற்றை — பாவாணர் என்னும் மொழி வழிப் போராளியை — மொழிகளுக்கெல்லாம் முதன்மொழி தமிழே என்பதைச் சொல்லாய்வால் — வித்தையும் வேரையும் முளையையும் தண்டையும் கிளையையும் காட்டி நிறுவிய மொழிமாந்தவியல் பேரறிவாளனை — மறைக்கப் பார்த்தது வடுகத் திராவிட வஞ்சகம். மறைந்த குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் நாகரிகம் தெற்கிலிருந்தே வடக்குநோக்கிப் பற்றிப் படர்ந்தது என்னும் வரலாற்றியலைப் படித்துப் படித்துச் சொல்லிய அக் கலங்கரை விளக்கத்தை வடுகச் சூழ்ச்சி மறைக்கப் பார்த்தது. ஆயினும், பாவாணர் பேரைச் சொல்ல ஆளா இல்லை? அவர் வளர்த்த தனித்தமிழ் களறியில் திளைத்த இளங்குமரனார் இல்லையா? இளைஞரின் நெஞ்சங்களில் பாவாணரை ஒரு மக்கள் இயக்கமாக்க — விடுதலை நெறியாக்க — பாவாணரை இளம் நெஞ்சங்களில் விதைப்பதைத் தொடங்கிவைக்க வந்துள்ள அந்த இளங்குமரனார் இங்கு....

தமிழ்-தமிழர் என எண்ணுவதும் இயங்குவதும் பொல்லாக் குற்றம் என நெற்றிக் கண்ணைக் காட்டினர் இங்குள்ள சிவப்பு வந்தேறிகள். நம்முடைய மெய்யியல் மரபுகளைச் சிறுமைப்படுத்தியும் — பண்பாட்டு வேர்களை ஏளனம் செய்தும் — புரியாதவற்றைப் புரியாத வகையில், புரிந்துகொள்ளாமலேயே அருவமாக ஏதேதோ அடாவடி பேசிவந்தனர். இந்தப் போக்கை ஏற்க மறுத்தவர் கோவை ஞானி அவர்கள். தமிழ்த் தேசிய ஓர்மையின் எழுச்சியையும் ஞாயத்தையும் கண்டு வியந்து — அந்த எழுச்சியில் தம்மை இணைத்துக்கொள்ள வந்துள்ள கோவை ஞானியும் இங்கு....

வெற்றுப் பொழுதுபோக்கிற்காக — அரசியல் அரட்டை அடிப்பதற்காக — சொற்சிலம்பம் ஆடுவதற்காக வந்துள்ள கூட்டமா இது? இல்லையே!

காவிரியை — தமிழகத்தின் உயிர்நாடியை — காக்க உரிமைக்குரலெழுப்ப — போர் ஆட — போருக்குத் தடம்காட்ட — வந்துள்ள கூட்டம் இஃதன்றோ? கன்னட இனவெறியின் கொற்றத்தை அடக்குவோமெனச் சூளுரைக்க — ஆளவந்த வடுகனின் வஞ்சகத்தை உரித்துக் காட்ட — வீறுகொண்டு வந்துள்ள துடிப்புள்ள படித்த இளைஞரின் திரட்சிதானே இது? தமிழினப்பற்றையே பற்றுக்கோடாகக் கொண்ட இளைஞரின் கொள்கைக் களறிதானே இந்தக் கூட்டம்? 'இந்தி'யன் சாடைகாட்டக் காவிரி ஒப்பந்தத்தை மீறிப் பத்துப் பதினான்கு அணைகளை அடாவடித்தனமாகக் கட்டி எழுப்பியவன் கன்னட வடுகன். தமிழையும் தமிழரையும் என்றும் பகையாகக் கருதிச் செயல்படும் அந்தக் கன்னட வடுகனுடனோ — தமிழ்நாட்டைத் திராவிட நாடாக்கிக்

www.tamilarangam.net

கெடுத்தது போதாதென்று, தமிழரின் நலன்களையே காட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கும் தெலுங்கு வடுகனுடனோ — அந்த வடுகருக்குத் தோள்கொடுக்கும் இடும்பன் 'இந்தி'யனுடனோ இனிச் சேர்ந்து வாழ இயலாது. இந்த அடிப்படைப் பாடத்தைக் கற்கவும் — தமிழர் பிறர்க்குக் கற்பிக்கவும் — காவிரி ஆற்றுரிமைப் பறிப்பு ஒன்றே போதும் என்பதை உணர்ந்துள்ள கொள்கை மறவர்கள் இங்கு ....

இந்தியனுடன் சேர்ந்துகொண்டு கார்கில் பம்மாத்துக் காட்டினர் வடுக ஆண்டைகள். தமிழனுக்குச் சொந்தமான கச்சைத்தீவைச் சிங்களனுக்கு 'இந்தி'யன் தாரை வார்த்தபோது வாய்பொத்திக் கிடந்தனர். தமிழகத்தின் தெற்கு எல்லையில் தமிழகத் தமிழன் ஈழத் தமிழனுக்குத் தோள்கொடுக்கக் கூடாது எனச் சொல்லித் தமிழ்ப்பகை புரையோடிய சிங்களவனோடு கூடிக் குலவினர். தமிழ் மீனவரின் மீன்பிடி உரிமையில் 'இந்தி'யனும் சிங்களனும் மண்ணை வாரிப்போட்டபோது — சிங்களக் கடற்படை கரை கடந்து வந்து தமிழ் மீனவரின் ஊர்களில் கண்டபடி சுட்டுவிட்டுச் சென்றபோது — ஏழை பாழைத் தமிழரிடம் உண்டியல் குலுக்கி அள்ளி எடுத்துச் சென்று தில்லிக்குக் கப்பம் கட்டிவிட்டு வந்த வடுகக் கயமையிலிருந்து பாடம் கற்க வந்துள்ள தமிழர் களத்து இளைஞர் கூட்டம் இங்கு ....

தமிழக-கருநாடக எல்லையில், தமிழக-ஆந்திர எல்லையில், தமிழக-கேரள எல்லையில் — அஃதாவது, 1956இல் தமிழர் இழந்த பகுதிகளில் — வாழும் தமிழர்மீது ஊமைத்தனமான ஒடுக்கலும் பண்பாட்டு அழிப்பும் அன்றாடம் அரங்கேறி வருகின்றன. மொழி உரிமையும் வேலைவாய்ப்பும் அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. அந்த எல்லைப்புறத் தமிழர்களின் முனகல்களையும் புலம்பல்களையும் காது கொடுத்துக் கேட்கத் திரண்டு வந்துள்ளனர் இங்கு....

சுருங்கிவரும் தமிழர்நாட்டின் எல்லைகளை வந்தேறிகள் இடையறாது கவர்ந்து வருகின்றனர். அவ் வந்தேறிகளின் ஊடுருவலையும் கொற்றைத்தையும் மணப்பறிப்பையும் மடிப்பறிப்பையும் தடுத்து நிறுத்தித் தமிழரின் மண்ணுரிமை காக்க ஆர்த்தெழுந்து வந்துள்ள இளைஞர்கள் இங்கு ....

தனி ஆந்திரம் கேட்டு வேங்கடத்தையும் நெல்லூர் மாவட்டத்தையும்கூடக் கவ்விச் சென்ற தெலுங்கனுக்கு — தனிக் கருநாடகம் வேண்டுமெனக் கேட்காமலேயே கொள்ளேகாளத்தையும் கோலார் தங்கவயலையும் பெங்களூரையும் தன் பங்காய்ப் பெற்ற கன்னடனுக்கு — ஒன்றிய கேரளம் கேட்டு வளம் பொய்க்காத இடுக்கி மாவட்டத்தையும் குமரி மாவட்டத்தின் பெரும்பகுதிகளையும் அரிந்து சென்ற மலையாளத்தானுக்குத் தனித்தனி மாநிலங்கள் அமைந்துவிட்டன. அவ்வாறு தனித்தனி மாநிலங்களை அடைந்த பின்னும் தமிழர்நாட்டில் அவர்கள் தொடர்ந்து இருக்கவும் — தமிழனின் தலைமீது குந்திக் கொண்டு ஆளவும் — என்ன உரிமை, வெங்காய உரிமை? அவனவன் நாட்டுக்கு அவனவன் போய்த் தொலைப்பதுதானே? இவ்வாறு கேட்க வந்துள்ளது எம் தமிழர் கூட்டம் இங்கு ....

தமிழரின் மொழியுரிமையையும் வாழ்வுரிமையையும் கருநாடகத்தில் கன்னடனும், ஆந்திரத்தில் தெலுங்கனும், கேரளத்தில் மலையாளியும் மதிக்காது மிதிக்கும்போது, இங்கு மட்டும் அவர்களுக்கென்ன சிறுபான்மையர் உரிமை வேண்டிக் கிடக்கிறது? இங்கு மட்டும் அந்த வந்தேறிகளின் மொழிகளுக்கு ஏன் வேண்டாத துணை ஆட்சி மொழித் தகுதி? இவ்வாறு கேட்கவும் கூடியுள்ளது இனமானத் தமிழர் கூட்டம் இங்கு ....

தமிழ்நாடு தமிழர்க்கே என ஓங்கி ஒலிக்க — திராவிடத்தை வெட்டியெறிய — தமிழர் நாட்டில் தமிழே ஆட்சிமொழியும் பாடமொழியும் என்று ஆக்க — தமிழகத்தின் பள்ளிகளில் தமிழின் புழக்கமே கூடாது என அடாது விடாது வம்புசெய்துவரும் வடுகத் திராவிடச் சூழ்ச்சியை வேரறுக்க — திரண்டு வந்துள்ள இனமானம் கொண்டோர் கூட்டம் இங்கு ....

மண்ணுரிமைப் போர் தொடங்கிவிட்டது. ஆம்! போர் தொடங்கிவிட்டது! போர் ஆட்டம் தொடங்கிவிட்டது! இந்தப் போரில் — போர் ஆட்டத்தில் — அவரவர் திறமைக்கேற்ப பங்கெடுக்கக் காலம் நம்மை அழைக்கிறது.

தமிழகம் கூறாடப்பட்ட இழவுநாளைக் கன்னடரோடும் தெலுங்கரோடும் மலையாளிகளோடும் சேர்ந்து கொண்டாடவா நாம் கூடியுள்ளோம்? இருப்பதைக் காக்கவும் இழந்ததை மீட்கவும் — அதற்கு அடிபோடவும் தானே — இந்தத் தமிழர் பெருவிழா எடுக்கப்படுகிறது?

www.tamilarangam.net

## தயிரைப் பாலாக்கும் புதிய அறிவியல்!

# திராவிடத்தைக் கடைந்தால் தமிழ் தேசம் பொங்குமாம்!!

***மண்ணைப் பறித்த திராவிடம்!***

திராவிடப் போர்வையைப் போர்த்திக் கொண்டு ஒரு வந்தேறிக் கும்பல் கடந்த பல ஆண்டுகளாக தமிழரைத் திருடிச் சம்பாதித்தது. ஆட்சிக் கட்டிலேறியது. மண்ணைப் பறித்தது. 1974இல் தமிழகத்திற்குள் சாராயத்தைத் திறந்துவிட்டது. திரைப்பட மாயையில் தமிழரைச் சிக்க வைத்தது. மேடையில் தமிழ் பேசியது. நடைமுறையில் தமிழைக் கொன்றது.

இந்நிலையில், தமிழ்த் தேச விடுதலைப் புயல் தமிழிளைஞர் நடுவில் மையம் கொண்டு கரை கடக்க ஆரம்பித்தது. திராவிடம் எனும் இந்த நச்சுக் கருத்தியலை அது நார் நாராக உரித்து நடுத்தெருவில் கிடத்தியது. தெலுங்கர்களுக்கு தொடர்ந்து தமிழ் மண்ணில் மேடை அமைத்துக் கொடுக்கும் தமிழ்ப் போர்வை போர்த்திக் கொண்ட ஒரு திராவிடக் கூட்டம் இதைக் கண்டு வெலவெலத்தது. திராவிட நரகலை நடுவீட்டுக்குள் வைத்து வழிபடவிரும்பினார்கள் அவர்கள். நரகலைவிட மட்டமானவைகளையெல்லாம் வழிபடும் உரிமை உள்ள இந்த நாட்டில் திராவிடத்தை வழிபடுபவரை மட்டும் தடுக்கவா முடியும்?

ஆனால், திராவிடம் இல்லாமல் தமிழ்த் தேசியம் இல்லை என்று பிதற்றுகிற நிலைக்கு இன்று வந்திருப்பது வருத்தத்திற்குரியதுதான். தலைமை வழிபாட்டுப் பித்தம் தலைக்கு ஏறி தமிழ்த் தேச விடுதலைப் போராட்டத்தை திராவிட இயக்கத்தோடு ஒட்டுப் போடும் கயமை மீண்டும் நடைபெற்றிருக்கிறது. "தந்தை பெரியாரும் தமிழ்த் தேசியமும்" என்று தலைப்பிட்டு நந்தன் வழி டிசம்பர் 1-15 ஏட்டில் அதன் ஆசிரியர் எழுதியுள்ள இரு பக்கக் கட்டுரை தமிழரைத் திசை திருப்பும் ஒரு முயற்சியாகவே படுகிறது.

***திராவிட அறிவியல் — பெரியார் சொல்றார் தொண்டர் செய்றார்!..***

"திராவிட இயக்கத்தின் தமிழுக்குப் பின்னே அறிவியல் நின்றது. தமிழியக்கத்தின் தமிழுக்குப் பின்னே இறையியல் நின்றது." என்று ஆசிரியர் ஆனா ரூனா எழுதுகிறார்.

திரு. ஈ.வெ.இரா. 1925 ஆம் ஆண்டு தொடங்கி நடத்திய குடியரசு எனும் இதழில் அவர் கீழ்வருமாறு கூறுகிறார். "தாய்த்திரு நாட்டிற்கு யாம் இதுகாரும் இயற்றி வரும் சிறு தொண்டினை ஒரு சிறு பத்திரிக்கை வாயிலாகவும் எம்மால் இயன்றளவு ஆற்றிவரல் வேண்டுமென இரண்டாண்டுகளுக்கு முன்னர் எம்மிடத்து எழுந்த பேரவா இன்று நிறைவேறும் பேற்றை அளித்த இறைவன் திருவடிகளில் இறைஞ்சுகிறோம்." (குடியரசு முதல் இதழ் பக். 7)

"... இப்பெரு முயற்சியில் இறங்கியுள்ள எமக்குப் போதிய அறிவையும் ஆற்றலையும் எல்லாம் வல்ல இறைவன் தந்தருள் பாலிப்பானாக" (பக்.7)

"...இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்திய செய்தியைக் கேள்வியுற்று நாம் பெரிதும் வருந்துகிறோம். ... அவரது இடது கன்னத்தில் முளைத்த சிறு கொப்புளமே அவரது ஆவியைக் கொள்ளை கொண்ட கூற்றுவன்! ... அவரது ஆன்மா சாந்தியடைய் எல்லாம் வல்ல இறைவன் அருள்வானாக." (பக்.7)

ஈ.வெ.இரா.வின் பக்தி அத்தோடு நின்றுவிடவில்லை. குடியரசு இதழ் தொடங்கியபோது ஈ.வெ.இரா. ஆற்றிய உரையில், "...இப்பத்திரிகா லயத்தைத் திறப்பதற்கு ஈசன் அருளால் ஸ்ரீ. சுவாமிகள் போன்ற பெரியார் கிடைத்தது அரிதேயாகும். இறைவன் அருளாலும், சுவாமிகளது அருளாலும் பத்திரிக்கை என்றும் நிலை பெற்று மற்ற பத்திரிக்கைகளிடமுள்ள குறையாதுமின்றி செவ்வனே நடைபெற வேண்டுமாய் ஆசிர்வதிக்கும்படி சுவாமிகளை வேண்டுகிறேன்." (முதல் குடியரசு - நூல்)

இவைகளெல்லாம் ஏதோ பட்டை நாமம் தீட்டிய குருக்களோ, பார்ப்பனரோ உரைத்த சொற்களல்ல. "பகுத்தறிவுப் பகலவன்", "தந்தை" பெரியார் சொன்ன, எழுதிய சொற்கள். அவரது குடியரசு ஏட்டிலேயே வெளியானவைகள் இவை.

அவரது பத்திரிக்கையின் நோக்கத்தை எவ்வாறு உரைத்தார் தெரியுமா? "...நமது நாட்டு மக்களின் உடல் வளர்ச்சிக்காகவும், மொழி வளர்ச்சிக்காகவும், சமய வளர்ச்சிக்காகவும் இதன் வாயிலாக இடையறாது உழைத்து வருவோம்...." இப்பத்திரிக்கையை ஆரம்பிக்கும் நோக்கம், "தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம்..." என்றார். பெரியாரின் நேர்க்கூற்று இது.

அவரது குடியரசு ஏட்டின் முகப்பில் "சாதிகள் இல்லையடி பாப்பா..." என்ற பாரதியார் பாடலை அச்சிட்டிருந்த அதே வேளையில் அதனருகிலேயே தனது பெயரை "ஈ.வெ. ராமசாமி நாயக்கர்" என்று தனது சாதி வாலுடன்தான் பொறித்திருந்தார். (குடியரசு 25.12.27)

மனுநூலை அப்பட்டமாக ஆதரித்து அதை உயிர்ப்பிக்க வேண்டும் என்று பேசி வந்த, பெரியாருடைய நெருங்கிய நண்பரான திரு. இராமநாதன் என்பாருடைய உரையை தனது முதல் குடியரசு இதழில் பெரியார் வெளியிட்டார். "பிராமண தர்மமாகிய தியாக புத்தியும், ஆண்மை அறிவும், ஷத்திரிய தர்மமாகிய வீரமும், வைசிய தர்மமாகிய விருந்தோம்பலும், சூத்திர தர்மமாகிய ஊழியமும்

www.tamilarangam.net

திருப்தி குணமும் மீண்டும் நமது நாட்டில் உயிர்ப்பிக்கச் செய்தல் காண்டற்கினிய கனவேயாகும். எல்லா தேசத்திற்கும் எல்லாக் காலத்திற்கும் ஏற்ற இத்தர்மங்களை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டு மென்பதில் யாலும் ஒருப்படுகிறேன்...." (குடியரசு 2.5.25)

இது ஏதோ விஜயபாரதம், துக்ளக் போன்ற ஒரு ஆர்.எஸ்.எஸ் ஏட்டில் வெளிவரவில்லை. மாறாக பகுத்தறிவுப் பகலவன் திரு. இராமசாமி நாயக்கரின் குடியரசு இதழில் வெளியான எழுத்துக்களே.

"கோயில்களும் மடங்களும் சரியானபடி பரிபாலிக்கப் படாததால்தான் சாதி வித்தியாசச் சண்டைகள் ஏற்படுகின்றன" என்கிற "அறிவியல்" விளக்கம் வேறு அதே இதழில் கொடுக்கப்பட்டது.

இதையெல்லாம் கடைசிவரை நம்பியதால்தானோ என்னவோ ஈரோட்டிலுள்ள சிவன் கோயில் பராமரிப்புக்கு பெரியார் தனது இறுதி காலம் வரை பொருளுதவி செய்து மகிழ்ந்தார்.

திராவிட இயக்கத்தின் மூல வேரான பெரியாரிலேயே இத்தனை குளறுபடிகள். அவரது அடி ஒற்றி வந்த அவரது தம்பிகளும், தங்கைகளுமாவது அந்த அறிவியலைக் கட்டிக் காத்தார்களா? அண்ணாவின் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்!", கருணாநிதியின் மஞ்சள் துண்டுக்குப் பின்னால் இருக்கும் அறிவியல், செயலலிதாவின் மகாமகக் குளியல், வேப்பிலை ஆட்டங்கள், மண் உண்ணும் கோலங்கள், தெருவில் உருளும் மாயங்களெல்லாம் "திராவிட அறிவியல்"தானே!

அந்தப் பெரியாரையே தெய்வமாக உயர்த்தி, தெருவெல்லாம் அவருக்குச் சிலை நட்டு மாலை போட்டு, "பகுத்தறிவுப் பாசறையை" பக்தகேடி மடங்களாக்கி, சமாதிக்குப் போய் மாலை மரியாதை செய்வதெல்லாம் அறிவியலுமில்லை, இறையியலுமில்லை! மாறாக வடித்தெடுத்த மடமைதான்!

பகுத்தறிவுக் குஞ்சுகளெல்லாம் அறிவியலாருமில்லை, மாந்த நேயமிக்கவருமில்லை. அதே வேளையில் இறை நம்பிக்கையும், சமயச் சார்பும் உடைய பலர் சிறந்த அறிவியலாராகவும், மாந்த நேயம் மிக்கவராகவும் இருந்திருக்கின்றனர். இராசீவ் கொலை வழக்கில் 26 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. தமிழர்கள் உயிர் காப்பு நிதி தண்டினார்கள். கொள்கை முரண்பாடுகளைக் கடந்து தமிழர்களம் உள்ளிட்ட பல தமிழர் அமைப்புக்கள் நிதி கேட்டு அலைந்தன. ஆனால், பகுத்தறிவுக் குஞ்சுகளுக்கோ மறைமுக ஆணை பறந்தது. நிதி தண்ட வேண்டாம் என்று! கட்சி மேலிடத்தின் கட்டளையை மீறி நன்கொடைப் புத்தகங்களை வாங்கிச் சென்ற அந்த 'திராவிட அறிவியல் கொழுந்துகள்' கமுக்கமாக நன்கொடைப் புத்தகங்களைத் திரும்பத் தந்துவிட்டார்கள்.

ஈ.வெ.இரா. மார்வாடிகளிடமிருந்து பெற்ற பல கோடிகள் உள்ளிட்ட இன்றைய கருப்புச் சட்டைக் கட்சியின் சொத்து சில நூறு கோடிகள்! அதை வைத்து இன்று வட்டிக் கடை நடத்துகிறார்கள். ஈழத்தமிழருக்கோ, உயிர் காப்பு நிதிக்கோ அந்தத் திராவிட நிதியிலிருந்து ஐந்து பைசா நகரவில்லை. ஆனால் சமயச் சார்பு நிறுவனங்கள் பல ஈழத் தமிழ் ஏதிலிகளை வாழ்விக்கப் படும் பாடு, மாந்த உரிமைகளுக்காக கொடுக்கும் குரல், புலிகளோடு ஈழத்தில் தோள் கொடுத்து நிற்கும் பாங்கு, ஒடுக்குண்ட தமிழ்க் குடிகளுக்கு இங்கு அவர்கள் கொடுக்கும் துணைத்தரவு ஆகியவற்றையெல்லாம் தமிழ்த் தேசிய உருவாக்கத்தில் "இறையியல்" சார்பு என்று மட்டும் முத்திரை குத்தி ஒதுக்கித் தள்ளிவிட முடியுமா?

பாவாணருக்கும், பிரபாகரனுக்கும் இறை நம்பிக்கை உண்டு. தமிழுக்கும் தமிழினத்திற்கும் இவர்கள் ஆற்றிய, ஆற்றிவரும் தொண்டை தமிழினம் மறக்குமா?




### பேர் மாறியது. உள்ளடக்கம் தொடர்ந்து நாறியது!

"...ஆனால் அது (நீதிக்கட்சி) திராவிடர் கழகமாக மாறியபோது மலையாளிகள், ஆந்திரர்கள், கன்னடர்கள் பொதுவில் நீதிக்கட்சியினர் விலகிச் சென்றார்கள். அரசியல் அரங்கிலிருந்து மறைந்து போனார்கள். இது தானே உண்மை. திராவிட இயக்கம் என்பது தமிழ்த் தேசிய இயக்கமே என்று உணர்ந்த அவர்கள் விலகி விட்டார்கள்" என சரடு விடுகிறார் நந்தன் ஆசிரியர்.

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகமாகியது, அண்ணா தி.மு.க.வாகியது, ம.தி.மு.க வாகியது. இவ்வியக்கங்களின் தலைவர்களாக ஈ.வெ.இரா., கருணாநிதி, ம.கோ.இரா., செயலலிதா, வைகோ, ஆற்காட்டு வீராசாமி என்று பலர் அடங்கிய ஒரு பட்டியல் நீண்டு விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன் வரைகூட போகலாம்.

கன்னடனும், தெலுங்கனும், மலையாளியும் ஓடிப்போனார்கள் என்றால் மேலே குறிப்பிட்ட இவர்களெல்லாம் யார்? தமிழர்நாட்டில் திராவிட இயக்கங்களின் பேரில் அரசியல் நடத்தியவர்களும், ஆட்சிக்கட்டில் ஏறியவர்களும் தமிழர்களா அல்லது இத்திராவிடர்களா?

### ஒலித்தாரா? ஓதுங்கினாரா?

"தந்தை பெரியார் அவர்கள் 11.9.38ல் தொடங்கி தமது இறுதிக் காலம் வரை (தமிழ்நாடு தமிழருக்கே!) என்று ஓங்கி ஒலித்தார் என்பதுதான் வரலாறு. என்று ஆனாருனா எழுதுகிறார்.

www.tamilarangam.net

1938 செப்டம்பர் திங்களில் இந்த முழக்கத்தை ஈ.வெ.இரா. முன்வைக்கிறார்.

அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் விடுதலை ஏட்டில் இது குறித்து விரிவாக எழுதுகிறார்.

டிசம்பர் 27 ஆம் நாள் வேலூரில் சில எதிர்காலத் திட்டங்கள் குறித்துப் பேசப்படுகிறது.

ஏறத்தாழ ஓராண்டு கழித்து அதாவது 1939 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் தமிழ்நாடு தமிழருக்கே என்பதை முன்வைத்து விழா எடுக்கப்பட்டது.

ஆனால் அடுத்த ஆண்டு சூலை 2ஆம் நாள் காஞ்சிபுரத்தில் நடந்த மாநாட்டில் "திராவிடநாடு" கோரிக்கையாக அது உருக்குலைந்தது.

இவ்வளவும் வெள்ளைக்காரன் ஆட்சியின் போதுதான் நடந்தேறியது என்பதையும் சற்று சிந்திக்க வேண்டும். இந்தி வல்லாட்சியாளர்களின் கீழ் நாடு அன்று சிக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

திராவிடநாடு என்பது தமிழ்நாடுதான் என்று பல மனவாடுத் திராவிடர்கள் இன்று பொருந்த விளக்கம் அளிக்க முயல்வார்கள். நாம் சற்று எச்சரிக்கையாய் இருப்பது நல்லது. 1944 ஆகற்று திங்களில் சேலத்தில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் திராவிடர் கழகமாக திரு. ஈ.வெ.இராவால் மாற்றப்பட்டபோது, கி.ஆ.பெ., அண்ணல் தங்கோ, மு. தங்கவேலு, சௌந்திர பாண்டியன் ஆகியோர், திராவிடர் கழகமென்று வேண்டாம், தமிழர் கழகமாக இருக்கட்டும் என்று எதிர்த்துப் போராடிப் பார்த்தனர். ஆனால், "திராவிடத்திலேயே" பெரியார் குறியாக இருந்தார்.

திராவிடர்கள், திராவிடம், திராவிடநாடு என்று பெரியார் குறிப்பிடுவதெல்லாம் தமிழர்களையும், தமிழகத்தையும், தமிழ்நாட்டையும்தான் என்று திரிப்பது, கலப்படமில்லாக் கயமைத்தனம் என்றே குறிப்பிடவேண்டும்.

16.1.44இல் சேலம் செவ்வாய்பேட்டையில் நடந்த கூட்டத்தில், "கண்ணப்பர் தெலுங்கர், நான் கன்னடியன், அண்ணாதுரை தமிழர்! நான் தமிழன் என்று என்னை ஒப்புக்கொள்ள முன்வந்தாலும் கன்னடர்களும், தெலுங்கர்களும் முன்வரமாட்டார்கள்..." என்றுதான் ஈ.வெ.இரா. தனது முடிவை ஞாயப்படுத்தினார். நந்தன் ஆசிரியர் சொல்வதுபோல கன்னட, தெலுங்கு, மலையாளிகள் எப்போது இங்கிருந்து ஒழிய முற்பட்டார்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

ஈ.வெ.இராவுக்கும் பிற தமிழர் தலைவர்களுக்கும் முரண்பாடு முற்றி கி.ஆ.பெ. போன்றவர்கள் பொதுமேடையில் பேச முடியாத அளவிற்கு பெரியாரின் தொண்டர்களால் இடர்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இறுதியில் கி.ஆ.பெ. போன்றவர்கள் விலகினர்.

அண்ணல் தங்கோதான் தனித்தமிழ்நாடு முழக்கத்தை முன்னெடுத்தார். பெரியார் போன்றவர்களின் சருக்கல்களையெல்லாம் பொருட்படுத்தாது இறுதிவரை மொழி, இனம், இனவிடுதலை, தமிழர்நாடு எனும் தளங்களில் விழிப்புணர்வையும் போராட்டங்களையும் முன்னெடுத்தார். அண்ணல் தங்கோவின் இம்முயற்சிகளை அண்ணாதுரை "நாலணா ஓரணா" என்று பேசிப் பகடி செய்தார்!

"தமிழ்நாடு தமிழருக்கே!" என்கிற முனைப்புகளை முனை முறித்தது மட்டுமல்லாமல் தமிழர்கள் பல இன்னல்களுக்கு நடுவில் மேற்கொண்ட முயற்சிகளைச் சீரழித்ததும் இத்திராவிடங்களே! என்பதைத் தமிழர் யாரும் மறத்தல் ஆகாது.

பெருஞ்சித்திரனார் மதுரையில் எடுத்த தனித்தமிழ்நாடு தொடர்பான ஒரு ஊர்வலத்தில் எழுச்சியைக் கண்ட ஈ.வெ.இரா. மறுநாள் தான் அதில் பங்கேற்கப் போவதாக அறிவித்துவிட்டு அருப்புக்கோட்டைக்குச் சென்றார். பெருஞ்சித்திரனார் உட்பட பலர் அன்று தளைப்படுத்தப்பட்டனர் என்பதை அறிந்ததும், "முகவரி இல்லாத கூட்டம்" என்று பொதுக்கூட்டத்திலேயே திட்டித் தீர்த்தார். இப்படிக் காலை வாரிவிட்ட பெரியாரை நோக்கி பெருஞ்சித்திரனார் வெறுப்போடும், வருத்தத்தோடும் தனது தென்மொழி இதழில், "ஏன் இம்மாதிரியான அரசியலைச் செய்கிறீர்கள்? என்றும், இந்த அகவை முதிர்ந்த நிலையிலாவது, தனிநாடு கேட்டு ஏன் அறிவித்துவிடக் கூடாது? எத்தனையோ தமிழர்கள் உங்கள் பின் வருவார்களே!" என்றெல்லாம் கேட்டுப் பார்த்தார்.

உண்மை நிகழ்வுகள் இப்படியிருக்க "பெரியார் இறுதிக் காலம் வரை ஓங்கி ஒலித்தார்!" என்று சரடு விடுவது சரியாகாது.

## யாரடா சூத்திரர்?

'நாங்கள் ஒடுக்கப்பட்ட, சூத்திரர், பஞ்சமர் பக்கமே நிற்கிறோம் என்பதை உறுதி செய்வதற்காகவே பெரியாரின் தமிழியக்கம் திராவிடர் கழகம், திராவிட இயக்கம் என்று தன்னை வெளிப்படுத்தியது!" என்கிறார் நந்தன் ஆசிரியர்.

முரசொலி 1962 பொங்கல் மலரில் வெளியிட்ட செய்தியை இங்கு நினைவுபடுத்துவது நல்லது. பெரியாரிடம் கேட்கப்பட்ட வினாக்களுக்கு அவர் விடுத்த விடையைக் காணுங்கள்.

வினா : துணி விலை உயர்ந்தது ஏன்?

ஈ.வெ.இரா. : புலைச்சி எல்லாம் "ஜம்பர்" போட ஆரம்பிச்சுட்டா! அதனாலேதான்!

வினா : அரிசி விலை உயர்ந்தது ஏன்?

ஈ.வெ.இரா. : கள் குடிக்கிற பசங்களெல்லாம் சோறு திங்கறானுங்க! அதனாலேதான்!

வினா : வேலையில்லா திண்டாட்டம் ஏன்?

ஈ.வெ.இரா. : பள்ளு பறையனுங்க படிக்க ஆரம்பிச்சிட்டானுங்கள. அதனாலேதான்!

வினா : கார்டு கவர் விலை உயர்ந்தது ஏன்?

ஈ.வெ.இரா. : தபால்காரனெல்லாம் அதிகச் சம்பளம் வாங்குறானே! அதனால!

வினா : விபூதி பூசிக் கொள்ளாதது ஏன்?

ஈ.வெ.இரா. : சந்நிதானம் பூசிக்கோ என்றால் பூசிக்கொள்வேன்.

www.tamilarangam.net

## வட்ட சதுரம்!

வட்டமான ஒரு சதுரத்தைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா? திராவிட இயக்கத்தின் வழியாகத்தான் தமிழ்த் தேசியம் உருவாகும் என்பது அதைவிட மோசமான ஒரு கற்பனை! திராவிடம் என்கிற கருத்தியலும், அக் கருத்தியலை மையமாகக் கொண்டு தோன்றிய திராவிட இயக்கங்களும் தமிழ்த் தேசியத்தை அடையும் பாதையில் உள்ள சேறு நிறைந்த புதைகுழிகள்! கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கனவு கண்ட எத்தனை ஆயிரம் தமிழிளைஞர்கள் இச் சேற்றில் விழுந்து, சிக்கிச் சீரழிந்து போனார்கள்!

தலைமை வழிபாடு, மேடைப் பேச்சு, பொய் உருவங்களைக் காட்டி நம்ப வைப்பது போன்ற பல கழிசடை உத்திகளால் உருவானதுதான் திராவிடம் என்கிற மாயப் பேய்! இந்த மாயப் பேய்க்குப் பல்லக்கு தூக்க இங்கே இன்னும் சில "தமிழர்கள்"! வெட்கக்கேடுதான்! நாயை அடித்து நாரத்தை மரத்துக்கு எரு போடுவது போல திராவிடம் எனும் வெறிநாயை வெட்டித் துண்டாடி தமிழ்த் தேச வளர்ச்சிக்கு எருவாக்குவதே தமிழிளைஞர்களின் முதல் கடமை!



எச்சங்களையும், சொச்சங்களையும் தாங்கித் தடவிக் கொண்டிருக்கிற சில பெரியவர்கள் தொட்டுவிட்டோமே என்பதற்காக நரகலைத் தூக்கிச் சுமக்கக் கடமைப் பட்டவர்கள் போல சுமக்கிறார்கள். சுமந்து ஓயட்டும், ஒழியட்டும் என்று நினைத்தால் இப்போது அத் திராவிடத்தைத் நம் மீது தெளித்துக் கொண்டும் நடக்கிறார்கள். குளித்துவிட்டு வரும் யானை பன்றியைக் கண்டு ஒதுங்க வேண்டும். வேண்டுமென்றே குறுக்கே வந்தால் அதை ஒரேயடியாக ஒழிக்க வேண்டும். அல்லது நாளையும் அது வந்து தொலைக்கும். திராவிடம் என்பது புடை நாற்றமெடுக்கும் சாய்க்கடையில் மூழ்கி முக்குளித்து வரும் பன்றி என்பதைப் புரிந்து கொள்வோம்!

தமிழினத்தின் மீது 1800 ஆண்டு காலமாக தொடர்ந்து அடிமைத்தனம் சுமத்தப்பட்டுள்ளது. நமது வரலாறும், பண்பாடும் சிதைக்கப்பட்டுள்ளது. இந்தி வெறிச் சிறைக்குள் இன்று தமிழர் அடைபட்டுக் கிடக்கிறார். அவருக்குத் திராவிடம் எனும் கைவிலங்கு பூட்டப்பட்டுள்ளது. கைவிலங்கை உடைக்காமல் சிறையைத் தகர்க்க முடியாது.

ஆங்கிலேயனும், வடுகனும் நம் மீது திணித்த வரலாற்றை தூக்கியெறி! நமது வரலாற்றைத் தேடு! நாம் திராவிடரில்லை என்பதைப் புரிந்து கொள்! நாம் தமிழர்கள் என்பதில் பெருமை கொள். திராவிடர்தான் சூத்திரர்கள், பரத்தமைக்கும் பிறந்தவர்கள். அவர்களில்தான் பொட்டுக் கட்டும் பழக்கமும், தேவதாசி முறைமைகளும் செழித்து வளர்ந்திருந்தன. தமிழ்க் குடிகளில் அம்மாதிரியான இழி நடைமுறைகள் இருந்ததில்லை. இன்றும்கூட அவ்வழிவந்த பெரும்பாலான நடிகைகள் தமிழர்களில்லை என்பதைப் புரிக. நம்மைத் திராவிடர்கள் என்று அழைப்பது இந்த இழி பட்டங்களை அவர்களோடு சேர்ந்து நாமும் சுமக்க வேண்டும் என்பதற்காகத்தான். நாம் சுமக்க வேண்டும் என்பது நமக்கென்ன தலையெழுத்தா?

பறையர் குடியினராகிய பழந்தமிழர்கள் அடிமைகளாகவும், தீண்டத்தகாதவர்களாகவும் இன்றுபோல் என்றும் இருந்ததில்லை. பாரி போன்ற கடையேழு வள்ளல்களும், பாணர்களும், உடன்படு கருமத் தலைவர்களாகவும், ஆசான் பெருங்கணிகளாகவும், அமைச்சர்களாகவும் இருந்துவந்த வள்ளுவர்களும் பின்னர் பறையர் குடியின் கிளைகளாக ஆக்கப்பெற்றத் தமிழராவர். மழவர், மள்ளர் என்று இலக்கியங்கள் குறிப்பிடும் பள்ளர் குடியினரே பாண்டியர், சோழர், போன்றோரின் முன்னோடிகளான ஆண்ட இனம். கள்ளர், மறவர் ஆகியோர் ஆங்கிலேயர் வந்தேறிய நாட்களில் கொடியுடனும் கொற்றமுடனும் மண்ணாண்ட மக்கள். முத்தரையர் சிற்றரசர்களாக ஆண்டனர். கவுண்டர்களும், வேளாளக் கவுண்டர்களும் தத்தம் பகுதிகளை ஆட்சியுரிமையுடன் ஆண்டனர். (திராவிடத்தால் வீழ்ந்தோம், பக். 50)" இப்படி உரிமைக் குடிமக்களாக வாழ்ந்த நம்மை, பண்பாட்டில் சிறந்து விளங்கிய நம்மை "சூத்திரர்" என்று அடையாளப்படுத்துவது வடுகத் திமிர்தான்.

"தமிழர்களுக்கு இடித்துரைத்து உணர்வேற்றுகிறோம்!" என்கிற போர்வையில் நம்மையும் நமது முன்னோர்களையும் தரம் தாழ்த்திப் பேசும், எழுதும் ஆட்களை அடையாளம் காண்! இது தமிழர்களுக்குள் மேலும் மேலும் தாழ்வு மனப்பான்மையைத் திணிக்கும் முயற்சி என்பதைப் புரிந்து கொள்! தமிழர் நாம் பெருமைப்பட எண்ணற்றவைகள் இம்மண்ணில் உண்டு! அவைகளை எண்ணிக் கொண்டு களமிறங்கு! களமாடு!! □

## தமிழர்களச் செய்திகள்.

தமிழர்கள் மட்டுமே தமிழர்களத்தில் உறுப்பினர் ஆக்லாம்.
சாதி, மதம், கட்சி கடந்து தமிழராய்த் தன்னை அடையாளப்படுத்துபவரே உறுப்பினராகலாம்.
உங்களுடைய பகுதிகளில் களம் அமைக்கும் முயற்சியை விரைவுபடுத்துங்கள்.

உறுப்பினர்கள் தமிழர் வரலாற்றைத் தெளிவுற படிக்க வேண்டும். தமிழருக்குள் இருக்கும் அகப்பகைகளுக்கான வேர்களை அறிய வேண்டும். புறப்பகையைச் சரியாக அடையாளம் காட்ட வேண்டும். அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல் என்பதைப் புரிந்து வினையாற்றுக.

www.tamilarangam.net

# தமிழர் பெருமை பேணுவோம்.

**கோப்பெருஞ்சோழன்**

## ஔவையார்

நம் தமிழ் முன்னோர்களையும், மன்னர்களையும் மட்டமாகவும் இழிவாகவும் மேடைகளில் பேசி மகிழ்கிறது ஒரு கூட்டம். வடுகக் கயமையால் இவர்களுக்குள் திணிக்கப்பட்ட தாழ்வு மனப்பான்மையை இவர்கள் வெளிச்சம் போட்டு மேடையேற்றுகிறார்கள். ஆனால் தமிழர் பெருமைப்படக்கூடிய எண்ணற்ற பெரியோர்கள் இம் மண்ணில் வாழ்ந்து தமிழினத்திற்கு ஏற்றம் தந்துள்ளனர். தமிழிளைஞருக்கு தமிழர் பெருமை குறித்து எடுத்தியம்ப வேண்டிய எண்ணற்ற செய்திகள் உள்ளன.



சித்தர் மருத்துவத்தில் கரை கண்ட சிலர், தமிழ்ச் சித்தர்கள் சாகாத் தன்மை எய்தி இன்றும் வாழ்வதாகச் சொல்கிறார்கள். நம்புவதற்கு கடினமாக இருப்பினும் தமிழ்ச் சித்தர்களின் ஆற்றலும், அறிவாண்மையும் வியப்பை அளிப்பதாகவே அமைகிறது. ஔவையார் தமிழ்ச் சித்தர்களுள் ஒருவர் என்று அவர்கள் அறிவிக்கிறார்கள்.

இன்றைய தருமபுரி அன்று தகடூர் என்று அழகு தமிழில் அழைக்கப்பட்டது. தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் அதியமான் நெடுமானஞ்சி. இவரைக் காண ஔவையார் ஒருமுறை அரண்மனைக்கு வந்தார். அங்கிருந்த அரசு அலுவலர்கள் ஔவையாரை மிகவும் நன்முறையில் கவனித்துக் கொண்டனர். ஆனால், அதியமானோ அலுவல் பல காரணமாக ஔவையாரைக் காண உடனடியாக வரவில்லை. மன்னனைச் சந்திக்க முற்பட்ட ஔவையாரை வாயிற் காப்பவன் தடுத்தான். ஔவையார் சினந்து பாடினார். அதியமான் ஓடோடி வந்துவிட்டான்.

கொள்ளையர்க்கரசி செயலலிதாவின் ஆட்சி காலத்தில் தஞ்சையில் தமிழ் மாநாடு நடந்தபோது தமிழ்ப் புலவர்கள் பலர் காவலர்களின் குண்டாந்தடியால் தாக்கப்பட்டு அவர்களை நாயினும் இழிவாக இழுத்துச் சென்று தளைப்படுத்தியது நமக்கு நினைவிருக்கும். தமிழர் கையிலிருந்த ஆட்சி அதிகாரங்கள் வடுகர் கைக்கு மாறியது முதல் தமிழறிஞர்கள் பேரிடருக்கு உள்ளாக்கப்பட்டனர் என்பதைப் புரியலாம்.

அதியமான் வேட்டைக்குச் சென்றபோது அரிய நெல்லிக்கனி ஒன்றினைப் பெற்றுவந்தான். ஆனால் சாகாது காக்கும் அக்கனியை தான் உண்ணாது அதை ஔவைக்குக் கொண்டு வந்து கொடுத்தான். தான் வாழ்வதைவிட தமிழ் வாழ வேண்டும் என்று விரும்பிச் செயல்பட்டான் அவன். "வீழ்வது நாமானாலும் வாழ்வது தமிழாகட்டும்!" என்று மேடையில் முழங்கிய வடுகர்கள் தமிழைக் கொல்வதிலும், சிதைப்பதிலுமே குறியாய் இருப்பது ஒரு தலைகீழ் மாற்றம்தானே! ஔவையை வாழ்விக்க அதியமான் அமிழ்தக்கனியைக் கொடுத்தான். ஆனால் ஒப்பற்ற பாவாணர் தனது தன்னிகரற்ற ஆய்வுகளை நடத்த குதிரைகள் அடையும் கொட்டடியைக் கொடுத்து தமிழை இழிவு செய்தார் தெலுங்கரான கருணாநிதி அவர்கள்.

அதியமான் ஆற்றல்மிக்கப் படைகளையும், படை நடத்தும் பட்டறிவு பலவும் பெற்றவன். அவனது திறன் அறியாத மற்றொரு தமிழ் மன்னன் தொண்டைமான் அவனோடு மோத முற்பட்டான். ஔவையாருக்கு இச் செய்தி எட்டியதும் அதிர்ச்சி அடைந்தார். தொண்டைமானிடம் தானே தூது சென்றார். அவரோ, அடுக்கடுக்காக அணியம் செய்யப்பட்ட தனது படைக்கருவிகளைப் பெருமையோடு ஔவையாரிடம் காட்டினான். ஔவையாரோ அவனது படைக்கலன் களைப் பார்த்துப் வஞ்சப்புகழ்ச்சியாகப் பாடினார். "உன் படைக் கருவிகள் எவ்வளவு நேர்த்தியாக, எண்ணெய் பூசப்பட்டு, மாலைகள் சூட்டப்பட்டு அணிகலன்கள் போல உள்ளன! ஆனால் அதியமானின் படைக்கருவிகள் கொல்லன் பட்டறையில் அல்லவா நேர்த்தி செய்யப்படுகின்றன!" என்று அதியமானின் போர்ப் பட்டறிவை நயத்திறனோடு தொண்டைமானுக்கு உணர்த்தினார். போர் தடுக்கப்பட்டது.

இன்றோ, தமிழ்ச் சாதிகளுக்குள் சண்டை மூட்டிவிட்டுக் குளிர்காயும் திராவிடத் தலைவர்களின் சூழ்ச்சியை புரியாத சாதிக் கட்சி தலைவர்கள் எத்தனைத் தமிழர்களைக் காவு கொடுத்திருக்கிறார்கள்! ஔவையார் மெய்யான இன ஓர்மை கொண்ட ஒரு தமிழ்ச் சான்றோர். தமிழருக்குள் பகை முற்றியதை அறிந்தபோது தன்னையே தற்கொடையாக அளிக்க முன்வந்த நல் உள்ளத்தவர். ஆனால் தன்னலத் தாகமும், தற்பெருமை மோகமும், தற்புகழ்ச்சி வெறியும் கொண்ட சிலர் போலியாக தங்களைச் சான்றோர்கள் என்று பெயர் சூட்டிக் கொண்டு தமிழர்களின் எதிரிகளுக்கே காவடி தூக்கி வருவது இன்றைய நிலையாக இருக்கிறது.

தமிழையும், தமிழினத்தையும் இரு கண்களாகப் பேணும் ஔவையார் போன்ற நற்சான்றோர்கள் இம் மண்ணில் உருவாகினால் தமிழுலகம் செழிக்குமன்றோ!

www.tamilarangam.net

# காவிரியும் கலைஞரும் -19

**பூ. அர். குப்புசாமி**

கன்னடர்கள் தமிழ்நாட்டிற்கும், கர்நாடகத்திலுள்ள தமிழர்கட்கும், தமிழ் மொழிக்கும், காவிரிக்கும் எதிராக வரிந்துகட்டிச் செயல்படத் தொடங்கி 43 ஆண்டுகள் ஆகின்றன. இப்படிச் செயல்படுவதில் அவர்களுக்குள், ஒரு கட்சிக்கு மற்றொரு கட்சி போட்டி போடுகின்றன.

நடுவணரசைப் பொருத்தவரை தொடர்ந்து கர்நாடகத்திற்குச் சார்பாகவும் தமிழகத்திற்கு இரண்டகமும் இழைத்துவந்த கதையே அன்றும் இன்றும்! நேரு காலம் தொடங்கி அனைத்து தலைமையமைச்சர்களும் (வி. பி. சிங் நீங்கலாக) இரண்டகம் இழைத்தவர்களே. அவர்களின் அரசியல், அதிகார வரும்படிக்காக தமிழகத்தைப் பலி கொடுத்தே வந்தார்கள், வருகிறார்கள். அவர்களில் இந்திராகாந்தியும், வாச்பேயும் தமிழக முதல்வரை மிரட்டியே பணிய வைத்தனர். நேரு குடும்பம் தமிழகத்திற்குச் செய்த கேடுகள் குறித்துப் பெரிய ஆய்வே நிகழ்த்த வேண்டும். இலால்பகதூர் சாத்திரி இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் 200 ஆண்டுகளுக்கு முன்பாக இலங்கைக்குப் பிழைக்கப் போன தமிழர்களுக்கும் சேர்த்தே கேடு விளைவித்தார்.

தமிழகத்திற்குத் தலைமையேற்ற இந்தி(ய) தேசியக் கட்சிகளின் தலைவர்களும் சரி, மாநிலக்கட்சிகளின் தலைமைகளானாலும் சரி, தெரியாமலும் தெரிந்தும் கர்நாடக, நடுவணரசுகளின் தமிழக எதிர்ப்புச் செயல்களுக்கு இணக்கமாகவே செயல்பட்டு வந்துள்ளனர். காமராசர், "காவிரி கர்நாடகத்தில் பாய்ந்தாலென்ன, தமிழகத்தில் பாய்ந்தாலென்ன? எல்லாம் பாரதத்தில்தானே உள்ளன!" என்கிற மாதிரியான கருத்தில் செயல்பட்டவர். (இறுதி காலத்தில் விழித்துக் கொண்டார். ஆனால் எல்லாம் காலம் கடந்து போயின!)

பக்தவச்சலம் மட்டுமே காவிரிச் சிக்கலில் ஒரு உறுதியான திடமான சித்தத்தைக் காட்டினார். அண்ணா நடுவணரசுக்கு மனுப்போட்ட நிலையில் மரணமெய்திவிட்டார். பின்னர் கலைஞர் "காவியம்"தான் நாளதுவரை! ஆம் ம.கோ.இரா. ஆட்சிக்கு வந்தபோது கலைஞர் தொடங்கிய பேச்சுவார்த்தை அத்தியாயம் தொடர்ந்தது. அது சரிப்படாது என அவருக்குப் பட்டபோது, "நடுவர் மன்றம்" வேண்டும்! என மைய அரசைக் கேட்டார். நடுவணரசு அதை மறுத்துவிட்டது.

அதனை மீறிச் செயல்பட அவருக்குத் துணிவு இல்லை. இடையில் செயலலிதா ஆண்ட ஐந்து ஆண்டும் நடுவர் மன்றம் நடந்தது. கர்நாடகமும், நடுவணரசும், "மீண்டும் பேசலாம்" என நெருக்கிப் பார்த்தன. "முடியாது, நடுவர் மன்றமே முடிவு செய்யட்டும்!" என்று கூறிவிட்டார். அதில் அவர் உறுதியாக இருந்தார். ஆனால், இடைக்காலத் தீர்ப்பில் நடுவர் மன்றம் இழைத்த ஒரு தவறை, தமிழக மக்களுக்கு எடுத்துரைப்பதற்குப் பதிலாக, - அதாவது, தமிழகத்திற்கு ஆண்டுக்கு 205 நூ.கோ.க. அடிதான் என்பதை வரவேற்றது தவறு. (நடுவர் மன்றத் தீர்ப்புக்கு மேல் முறையீடு கிடையாது!) அன்றிலிருந்து இன்றுவரை ஏதோ தமிழ்நாட்டுக்கு உரிய பங்கே 205 நூ.கோ.க. அடி நீர்தான் என தமிழக மக்கள் அனைவரும் எண்ணும்படித் தமிழகத் தலைவர்களும் இதழ்களும் ஒரு தவறான எண்ணம் ஏற்படக் காரணமாயினர். ஆண்டுக்கு 400 நூ.கோ.க. நீருக்கு மேல் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பெற்று வந்துள்ளோம். ஏன் 1990 வரை கர்நாடகாவே 360 முதல் 412 நூ.கோ.க. அடி வரை ஒத்துக் கொண்டிருந்தது. பின் ஏன் 205 நூ.கோ.க அடி நீர் என்ற எண்ணம் ஏற்படும் நிலை ஏற்பட்டது? அதுவும் தரமாட்டோம் என அவர்கள் குறுக்கே திரும்பும் நிலை எப்படிச் சாத்தியமாயிற்று? அது ஒரு நீண்ட கதை.

ஆனால் காவிரி இழப்பில் தமிழகத் தலைமை இழைத்த தவறுகளில், இல்லை இல்லை குற்றங்களில் பெரும்பங்கு கலைஞரையேச் சாரும், என்பதால் இத்தொடரை முதலில் எழுதினோம்.

1998 ஆகற்றுத் திங்களில் தில்லிக்கு வரவழைக்கப்பட்ட கலைஞரிடம், 1991 .ல் நடுவர் மன்றம் தந்த இடைக்கால ஆணையிலும், அதை நிறைவேற்ற நடுவணரசு - குச்ரால் காலத்தில் - இயற்றியிருந்த திட்டம் மற்றும் ஆணைய வரைவிலும் இருந்த தமிழகக் காவிரி உரிமைக்கு பாதுகாப்பு தரும் அம்சங்கள் அனைத்தையும் அடியோடு கைவிட்டு - ரத்து செய்து கர்நாடகம் தந்த திட்டத்தில் வாச்பேயி கலைஞரை மிரட்டி கையெழுத்து வாங்கிவிட்ட விளத்த(விவர)ங்களை முன் கட்டுரையில் விவரித்திருக்கின்றோம்.

ஆனால் இப்போது அதைவிடப் பெரிய மோசடி ஒன்றை வாச்பேயி தமிழகத்திற்குச் செய்துள்ளார் என்பது வெளிப்பட்டுள்ளது. அதாவது, மாகாணங்களுக் கிடையிலான நதி நீர்த் தாவாச் சட்டம் விதி 6 ஏ(7) ன் படி வகுக்கப்பட்ட திட்டம் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால், 1998 ஆகற்று திங்களுக்குப் பிறகு தொடர்ந்து நடந்த எந்த நாடாளுமன்றக் கூட்டத்திலும் அந்த ஓட்டைத் திட்டத்தையும்கூட நாடாளுமன்றத்தின் முன் வைத்து அதை நிறைவேற்றவில்லை. எனவே, பெரிதாக பேசப்பட்ட ஆகற்று ஒப்பந்தம் "ஒரு முற்றுப் பெறாத முயற்சி" என கர்நாடக உயர் நீதி மன்ற முன்னாள் தலைமை நடுவர் சுட்டிக் காட்டுகிறார். இது உண்மையிலேயே மிகப் பெரிய மோசடியாகும்.

ஆனால் கடந்த ஓராண்டு காலமாக கலைஞர் காவிரிப் பிரச்சனையைத் தீர்த்துவிட்டதாக கதை அளந்து கொண்டு இருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக தேர்தல் காலம் முழுவதும் கலைஞர் கட்சி சார்பிலும், வாச்பாய் கட்சி சார்பிலும் காவிரி குறித்து செய்த விளம்பரங்கள் மோசடியின் உச்சாணிக்குப் போய்விட்டன. இத்தனையும் செய்துவிட்டு,"ஆணையம் அமைத்தது சட்ட ரீதியாகத்தான்!" என அளக்கிறார். "இச் சிக்கலை, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டுச் சிந்திக்க வேண்டும்!" என கீதாபதேசம் செய்கிறார். தனது செயல்களைத் திறனாய்வு செய்கிறவர்கள் மீது எரிந்து விழுகிறார்.

www.tamilarangam.net

சென்ற ஆண்டு ஓரளவு நல்ல மழை பெய்து விட்டதால் இவருடைய தில்லி மோசடி வெளிப்படாமல் போய்விட்டது. ஆனால் இந்த ஆண்டு (1999) அப்படி அல்ல! கர்நாடகத்தில் சூன் முதல் செப்டம்பர் வரை நல்ல மழை என வானிலை ஆய்வகம் செய்தி வெளியிட்டுள்ளது. சற்று முன் கூட்டிப் பெய்த மழை நீர் முழுவதையும் கர்நாடகம் தான் கட்டிய சட்டத்திற்குப் புறம்பான அணைகளில் நிரப்பி வைத்துக் கொண்டது. அதை அடுத்து மேட்டூர் அணை சூன் 12இல் திறக்கப்பட வேண்டும். ஆனால் கர்நாடகம் செய்த பழியால் மேட்டூர் அணை திறக்கப்படுவதற்கு உரிய அளவு நீர் இல்லாததால் திறப்பு தாமதப்படுத்தப்பட்டது. ஆனால் உழவர்கள் மிகத் தாமதமாகக் குறுவை பயிரிட்டதால் பிறகு அறுவடைக் காலத்தில் அடைமழையில் பயிர் பாழகுமே எனப் பயந்து அணையை உடனே திறக்க வேண்டும் என்று உரத்துக் குரல்கொடுத்தனர். எனவே, சூலை 1ல் அணையைத் திறந்து வைக்க வேண்டியதாயிற்று. தாமதமாகத் திறந்ததால் குறுவைப் பயிரிடும் பரப்பில் மிகக் குறைவாகவே உழவர்கள் பயிரிட்டனர். திறந்துவிட்ட நீர், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பல இடங்களுக்குக் குறிப்பாக கடைமடைப் பகுதிகளுக்குச் சென்றடையவில்லை. முறை போட்டதும் ஒத்துவரவில்லை. எனவே, மதகுகளுக்குக் காவல் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் மேட்டூர் மேட்டு வாய்க்கால் திறக்கப்படவே இல்லை. புள்ளம்பாடிக் கால்வாய் திறக்கப்பட்ட சில நாட்களில் மீண்டும் அடைக்கப்பட்டது. கட்டளை உயர்மட்டக் கால்வாயும்திறந்த சில நாட்களில் அடைக்க வேண்டியதாயிற்று. எனவே, புதுகை மாவட்டம் (வடபகுதி) கடலூர் மாவட்டம் (தென்பகுதி), தஞ்சை (கீழ்பகுதி) நாகை, திருவாரூர் மற்றும் காரைக்கால் பகுதிகளில் வைக்கப்பட்ட ஒரு பகுதி குறுவை பயிர்களும் நாசமாகும் நிலைமை ஏற்பட்டது.

இடையில் தாமதமாக கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழைநீர் மேட்டூர் அணைக்கு வந்தாலும் பிறகு அடங்கிவிட்டது. எனவே, பூட்டையும், புடையுமாக இருந்த குறுவையைக் காக்க அதிக நீர் வேண்டுமென்று உழவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். தேர்தல் முடியும்வரை சிக்கலைக் கமுக்கமாக வைத்திருந்த கலைஞரால், பின்னர் வெடித்துக் கிளம்பிய உழவர்களின் கோரிக்கைக்குப் பணிய வேண்டியது வந்தது. எனவே நிமையத்திற்கு 15000 கன அடி நீர் என்பதை 17000 கன அடியாக மேட்டூரிலிருந்து விடுவிக்கும்படி ஆணையிட்டார். நீர்மட்டம் மளமளவெனக் குறையத் தொடங்கியது. பயிரைப் பாதுகாக்க வழியறியாது உழவர்கள் பலவிதமான கிளர்ச்சிகளில் ஈடுபட்டார்கள். தொடர்வண்டி நிறுத்தம், சாலை மறியல், கொடும்பாவி எரிப்பு, மண்வெட்டிப் போராட்டம், என இப்படிப் பல நடைபெற்றன. அமைச்சர்களின் ஊர்திகளும் மறிக்கப்பட்டன.

ஆகற்று 98ன் ஏற்பாடு போலியானது என்பது உழவர்களுக்கும், இதழாளர்களுக்கும்கூட விளங்கத் தொடங்கியது. இவ்வாண்டு கலைஞரின் செயல் சாகசங்கள், சூழ்ச்சி நிறைந்த பரப்பல் உத்திகள் எதுவும் எடுபடவில்லை. தொடக்கத்திலேயே காவிரி தீரப் பகுதி உழவர்கள் - அதிகாரிகள் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து ஏதோ அதில், "மேட்டூரைத் தாமதமாகத் திறக்கலாம்!" என்று முடிவு செய்யப் பட்டதாக அறிவித்தார். வறட்சி தாண்டவமாடத் தொடங்கியதும், பொறியாளர்கள் 60 பேரை நதித் தீரத்திற்கு அனுப்பி அவர்கள் நீர்ப்பாசனத்தை ஒழுங்கு செய்வார்கள் என அறிவித்தார். பொதுப்பணித்துறை அமைச்சரையும், பாசனத்துறை அதிகாரிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் விட்டு உண்மைக்கு மாறான செய்திகளைக் கொண்ட அறிக்கைகளை விடச் செய்தார். அமைச்சர்களை வறண்ட வட்டாரங்களைப் பார்வையிட அனுப்பி வைத்தார். அவரது நோக்கம் நேரடியாகப் பாதிக்கப்பட்டப் பகுதியில் வசிப்பவர்களைத் தவிர இதர பகுதித் தமிழர்களை ஏமாற்ற வேண்டும் என்பதே ஆகும். இல்லையென்றால் தேர்தல் முடிந்ததும் மருமகனுக்கும் தன் கட்சிக்கும் அமைச்சரவையில் அதிகம் இடம் பிடிக்க தில்லிக்கு ஓடியவர், ஏன் காவிரிக்காக தில்லி பக்கம் போகாமல் குத்துக்கல்லாக தில்லியிலேயே இருந்துவிட்டார்?

ஆனால் மேட்டூர் அணை நீர்மட்டம் 33 அடிக்குக் குறைந்து விட்டது. மழையும் கைகொடுக்கவில்லை. அணை இரண்டு மலைகளுக்கு இடையே கட்டப்பட்டதால் கீழே உள்ள 33 அடி நீரும் மேல்மட்டத்தில் நிற்கும் ஒரு அடி நீருக்கு சமம் ஆகாது. அணை காலியாகி மக்களும், பள்ளிப் பிள்ளைகளும் சுற்றுலா சென்று பார்க்கும் காட்சிப் பொருளாகிவிட்டது. 360 மெகாவாட் மின்சார உற்பத்திப் பொறிகள் செயலிழந்து நின்றுவிட்டன.

**தேர்தல் முடிந்ததும் மருமகனுக்கும் தன் கட்சிக்கும் அமைச்சரவையில் அதிகம் இடம் பிடிக்க தில்லிக்கு ஓடியவர். ஏன் காவிரிக்காக தில்லி பக்கம் போகாமல் குத்துக்கல்லாக சென்னையிலேயே இருந்துவிட்டார்?**

இத்தனைக்கும் காவிரி ஆணையம் கூடவே இல்லை. கலைஞரும் தலைமை அமைச்சரிடம் பேசிப்பார்த்தார். கண்காணிப்புக் குழு மட்டுமே செயல்பட்டது. அவர்கள் கர்நாடக அணைகளையும் தமிழகத்தின் காவிரித் தீரப் பகுதியில் உள்ள காய்ந்த பகுதிகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு செப்டம்பர் மாதத்தில் கர்நாடகம் தரவேண்டிய மீதமுள்ள 3 நூ.கோ.க.அடி நீரையும் அக்டோபரில் ஒரு 6 நூ.கோ.க.அடி நீரையும் உடனே கர்நாடகம் தன் அணைகளிலிருந்து திறந்துவிட வேண்டும் எனவும் தொடர்ந்து அக்டோபர் உட்பட மாதவாரி நீரை விட்டுவர வேண்டும் எனவும் பரிந்துரை செய்தனர். அவர்களது அதிகாரம் பரிந்துரை என்கிற அளவுக்குத்தான் உண்டு. அதையேத் தாளாமல் கர்நாடகம் தாண்டிக் குதித்தது. கர்நாடக முதல் அமைச்சரும் இதரத் தலைவர்களும் போர் முரசு கொட்டினர். கண்காணிப்புக் குழுவின் செயல் அதிகாரம் அற்றது எனவும், அதன் பரிந்துரை சட்டத்திற்கு எதிரானது எனவும் கூறினர். முதலில் கண்காணிப்புக் குழு முடிவை ஏற்கிறேன் எனக் கூறிய கர்நாடக முதல்வர் பிறகு ஒரு சொட்டு நீர்கூடக் கொடுக்க முடியாது எனக் கூறி விட்டார். வழக்கம்போல பெங்களூரில், குசராத்தி, மார்வாடிப் பணத்தில் தின்று

www.tamilarangam.net

கொழுத்துத் திரியும் காலிக் கும்பல்கள் தமிழக முதல்வரின் கொடும்பாவியை எரித்தனர். இந்தக் காட்சி அங்கே!

ஆனால், தமிழகத்தில் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் நீர் கேட்டு கிளர்ச்சி செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திமிரோடு அறிவித்தார்.

ஆனால் வீறு கொண்டு எழுந்த உழவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை எச்சரித்தனர். கலைஞர் ஏற்பாடு செய்து தஞ்சையில் 22.09.99இல் நடந்த ஓர் உழவர்கள் கூட்டத்தில் கலைஞரின் கையாளாகச் செயல்படும் - கர்நாடகத்தின் முகவராகச் செயல்படும் ஒரு ஆளை எதிர்த்து உழவர்கள் அவருடைய இரண்டகத்தைத் தோலுரித்துக் குரல் கொடுத்தனர். எனவே, அவரால் தமிழக அரசுக்குச் சார்பான தீர்மானம் எதையும் அன்று போட முடியவில்லை.

கலைஞர் தன் தந்திரங்களை மாற்றினார். அரசு அறநிலையத் துறை வழியாக மழை வேண்டி சிறப்புப் பூசைகள், வருணசெபம், மகா சாந்தி ஹோமம் முதலியனவற்றைச் செய்ய அறிக்கைகள் விடப்பட்டன. பூசைகளும் நடந்தன. பொதுப்பணித்துறை சார்ந்த அதிகாரிகள் தஞ்சை பெரிய கோயிலில் உள்ள நந்திக்கு மிளகுப் பொழிவு செய்தனர். பொதுப்பணித்துறை அமைச்சரோ, "எப்போதும் எங்களுக்குள்ள தண்ணீர் ராசி இந்த ஆண்டும் கைவிடாது!" என தன் "பகுத்தறிவுப் பூர்வமான" நம்பிக்கையை வெளியிட்டார்.

தமிழக முதல்வர் நடப்பில் உள்ள பயிரைக் காக்க தாமதப்படும் சம்பா நடவைத் துவங்க 36 நூ.கோ.க. அடி தண்ணீர் வேண்டும் என தலைமையமைச்சருக்கும், கர்நாடக முதல்வருக்கும் செய்தி அனுப்பினார். கர்நாடக முதல்வர் அதற்கு ஒத்துக் கொண்டதாக கலைஞர் அறிவித்தார். ஆனால் பட்டேலோ தான் ஒன்றும் அப்படிக் கூறவில்லை என்று மறுத்துவிட்டார். தமிழ்நாடு தன் தண்ணீர்த் தேவையை மிகைப்படுத்திக் கூறுவதாகவும் பட்டேல் கூறினார். தலைமையமைச்சரோ தன் தேர்தல் பயணத்தில் தீவிரமாக இருந்தார். அதனிடையே அவர் கர்நாடக முதல்வரைத் தமிழகத்திற்குத் தண்ணீர் விடும்படிக் கூறியதாக செய்தி வந்தது. கர்நாடக முதல்வரோ அவருக்கும் "முடியாது" என்ற பதிலையே ஆணித்தரமாகக் கூறினார்.

நஞ்செகவுடா என்ற ஒரு கர்நாடகத் தலைவர், "காவிரி ஒன்றும் தலைமையமைச்சரின் அப்பன் வீட்டுச் சொத்து அல்ல!" என்று இடக்காகவேக் கூறினார்.

"தலைமையமைச்சர் கர்நாடகத்தின் உள் விவகாரங் களில் எல்லாம் தலையிடக்கூடாது!" என்று இன்னொரு கர்நாடகத் தலைவர் வாச்பாயை எச்சரித்தார்.

இந்த வளர்ச்சி எல்லாம் கண்டு பெங்களூர்த் தமிழர்கள் பயந்த ஒரு நிலைக்கு ஆளாக்கப்பட்டனர். மைசூர்த் தமிழ்ச் சங்க ஏடு, "மைசூர் முரசு"-ம் அப்படிப்பட்ட பய உணர்ச்சி தங்கள் வட்டாரத்திலும் ஏற்பட்டதாக எழுதுகிறது.

இந்த நிலையில் தமிழக அரசு சம்பா நடவைத் தள்ளிப் போடும்படி உழவர்களை கேட்டுக் கொண்டது.

தலைமையமைச்சர் 29.09.99 அன்று காவிரி ஆணையத்தைக் கூட்டுவதாக கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, புதுச்சேரி முதல்வர்களுக்கு அழைப்பு அனுப்பினார். ஆனால் கர்நாடக முதல்வர், ஆணையிட இயலாத அந்த ஆணையக் கூட்டத்திற்கு செல்ல மறுத்து "மருத்துவ விடுமுறைச் சீட்டு" அனுப்பி விட்டார். உண்மையில் இந்த ஆணையமே ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி சட்டப்படி உருப்பெறவில்லை. கடந்த 14 மாதங்களில் ஆணையத்திற்கு முன்னால் கொண்டு வரப்பட்டச் சிக்கல்களை ஒன்றே ஒன்றுதான். அதாவது நீர் அளவை எங்கே எடுப்பது?, எல்லை ஊரான பில்லி குண்டுவிலா அல்லது மேட்டூரிலா என்பதையே ஆணையம் இன்னும் முடிவு செய்யவில்லை.

கர்நாடக அணைகளில் இருந்துதான் இடைக்கால ஆணையின்படி மாத வாரியாகவும், கிழமைவாரியாகவும் நீர் விடப்பட வேண்டும், என்பது நடுவர் மன்றத் தீர்ப்பு. ஆனால், கர்நாடகமோ இந்த ஆண்டு சனவரிக்குப் பிறகு சூன் முடிய அவர்களின் அணைகளில் நிரம்பி வழிந்த நீரை மட்டும் விட்டுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு பட்டேல், "மழை பெய்தால் அதை எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று தமிழர்நாட்டைப் பார்த்து திமிரோடு பேசினார். அவர்கள் இவ்வாண்டு மழை குறைவு எனக்கூறுவது பொய்! சூலை, ஆகற்று, செப்டம்பர் மாதங்களில் வந்த கொஞ்சம் நீரும் அவர்கள் அணை கொள்ளாத மிகுதி மழை நீரே ஆகும்.

தமிழகத்திலுள்ள மக்களில் ஒரு பகுதியினருக்காவது தற்போது 1998 ஆகற்று மோசடி விளங்கியுள்ளது. கண்காணிப்புக் குழு தன் பரிந்துரை அறிக்கையைத் தலைமையமைச்சரின் செயலரிடம்தான் கொடுக்க முடிந்தது. தலைமையமைச்சரைச் சந்திக்க முடியவில்லை.

## கருநாடகம் செய்த கொடுமையால் தமிழ்நாட்டு உழவர்களுக்கு 1000 கோடி உருபா நட்டம் என ஒரு உழவர் கழகத் தலைவர் கூறுகிறார்.

வறட்சியின் உச்சத்தின்போது சமுதாயத்தின் அடித்தட்டு மக்கள் உழவுக் கூலிகள் தேநீர் குடிக்கக்கூட காசு இல்லாமல் அல்லலுற வேண்டியதாயிற்று. சிலர் திருடுவதிலும், கொள்ளையடிப்பதிலும் ஈடுபட்டதாகச் செய்தி வந்தது. சில சிற்றூர்களில் மக்கள் தங்கள் வாழ்விடங்களைக் காலி செய்துவிட்டு வெளியேறிவிட்டார்கள். காரைக்காலில் அரசு நிலவரியை ரத்து செய்துவிட்டது.

இந்த ஆண்டு தமிழகத்தில் மழை பொய்த்துள்ளது. வானம் பார்த்த வேளாண்மையே என்கிற நிலை கிட்டதட்ட உருவாகிவிட்டது. கருநாடகம் செய்த கொடுமையால் தமிழ்நாட்டு உழவர்களுக்கு 1000 கோடி உருபா நட்டம் என ஒரு உழவர் கழகத் தலைவர் கூறுகிறார்.

இந்த நெருக்கடி தமிழர்நாட்டு தலைவர்களில் சிலரைக் கொஞ்சம் உறுதியோடு பேச வைத்துள்ளது. கர்நாடகத்தின்மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும், அங்கு படைகளை அனுப்ப

www.tamilarangam.net

வேண்டும் என்றும், அரசியல் சட்டம் 356யைப் பயன்படுத்தி கர்நாடக அரசைக் கலைக்க வேண்டும் என்றும் இவ்வாறெல்லாம் பேசுகிற அளவுக்கு நிலை வளர்ந்துள்ளது.

கர்நாடகம் தலைமையமைச்சரின் அழைப்பையே உதாசீனம் செய்யும் நிலை எப்படி ஏற்பட்டது? தமிழகம் காவிரியை வேகமாக இழக்கும் நிலையும் எப்படி வந்தது? உண்மையில் கர்நாடகம் நடுவர்மன்ற இடைக்கால ஆணையை நிறைவேற்ற முடியவில்லை என்றால் தன்னை அணுக வேண்டும் என இடைக்காலத் தீர்ப்பில் நடுவர் மன்றம் கூறியுள்ளது. மெய்யாகவே தன் அணைகளில் நீர் குறைவு என்றால் கர்நாடகம் ஏன் நடுவர் மன்றத்தை அணுகவில்லை? மாறாக, தலைமை அமைச்சரையே மிரட்டும் அளவிற்கு எப்படி அவர்களால் போக முடிகிறது என்பதையெல்லாம் எழுதிவந்துள்ள கட்டுரைகள் அனைத்தையும் காய்ப்பு உவர்ப்பு இன்றி படித்துப் பார்ப்பவர்களுக்குப் புரியும்.

மேட்டூரிலிருந்து நீர் விடுவதை நிறுத்தியாக வேண்டுமென்ற நிலை ஏற்பட்டபோது எங்கேயோ கொஞ்சம் மழை பெய்துவிட்டதை வைத்து அணை, 30.09.99 அன்று மூடப்பட்டது. தற்போது பெய்துள்ள மழையால் மேட்டூருக்கு கொஞ்சம் நீர் வந்துள்ளது. காவிரிக் கடைமடைப் பகுதியில் பெய்துவரும் ஓரளவு மழை சில பகுதிகளில் குறுவையைச் காப்பாற்றவும், சம்பா நடவு ஓரளவு நடைபெறவும் சாத்தியமாகியுள்ளது. ஆனால் ஏதோ மழை கொட்டோ கொட்டு எனக் கொட்டுவது மாதிரியும் குறுவையும், சம்பாவும், தாளடியும் நீக்கமறப் பயிராவது போலவும் அரசு தன் முயற்சியால் செய்திகளைப் பரப்பி மக்கள் நடுவில் ஒரு தவறான எண்ணத்தை விதைத்துவிட்டது.

ஆக, கர்நாடக அரசின் தொடரும் காவிரி தொடர்பான அணைத்திட்ட வேலைகளும், கால்வாய் விரிவாக்கம் முதலிய வேலைகளும், நடுவணரசின் ஓரவஞ்சனைப் போக்கும், தமிழகத்தினுள் ஒற்றுமையின்மையும், கலைஞர் போன்றவர்களின் இரண்டகமும் தமிழகம் தன் காவிரி உரிமையை இழக்கும் நிலைக்கு வேகமாக இட்டுச் செல்லும் நிலையை உருவாகியுள்ளது.

இந்த நிலையை மாற்றி தமிழகம் காவிரி உரிமையை நிலைநாட்ட கட்சிப் பற்றும், சாதிப் பற்றும் தன்னல ஓர்மையும் இல்லாத தமிழ் இன ஓர்மை கொண்ட இலக்கக்கணக்கான இளைஞர்கள் ஆர்த்தெழ வேண்டும். காவிரி உரிமை மட்டுமல்ல, பெரியாறு உட்பட தமிழ்நாடு இழந்துவரும் நீர் உரிமைகளை காக்கவும் மற்றும் மண்ணுரிமை, பொருளாதார உரிமைகளைக் காக்கவும் தற்போது உள்ள தமிழகத் தலைமைகள் அகற்றப்பட வேண்டும். தமிழ்நாட்டைக் காக்க என்றே கங்கணம் கட்டிப் புறப்படும் இளைஞர்கள் தமிழகத்தை வாழவைக்கும் உரியைத் தங்கள் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான அறிகுறிகளும் தோன்றியுள்ள நிலையைத் தற்போது காண்கின்றோம்.

அன்னை காவிரியை நம் செந்நீர் சிந்தியும், சென்னி கொடுத்தும் காப்போம். வாரீர், வாரீர் என அழைக்கிறோம்.

***பின்னுரையாகச் சில...***

தமிழகத்தைப் பொறுத்தவரையில் காவிரி நம் கையை விட்டுச் சென்று தமிழகத்தின் எதிர்காலம் இருட்டாகி விடுமோ என்று அச்சம் கொள்கிற நிலைக்கு நாம் ஆளாக்கப்பட்டச் செயல்களில், கலைஞரின் பங்கு மிக அதிகம். அவருடைய கெட்ட வாய்ப்பு, காவிரி தொடர்பான முகாமையான முடிவுகள் எடுக்க வேண்டிய நேரங்களில் எல்லாம் அவர் தமிழக முதல்வராக இருந்ததும், இருப்பதும்தான்.

காவிரி மட்டுமல்ல, இதர தமிழகத்தின் தலையாயச் சிக்கல்களில் எல்லாமே, தமிழக உரிமையா அல்லது அவரது ஆட்சியா என்கிற வினா எழும்போதெல்லாம் அவர் ஆட்சியையே அதிகம் நேசித்துவிட்டதால் தமிழகத்திற்கு நேர்ந்துவிட்ட இழப்புக்கள் காவிரி மட்டுமல்ல. இன்னும் பலப்பல உண்டு.

மற்றபடி தமிழகம் காவிரியை இழந்து வருவதில் இந்தி(ய) தேசியக் கட்சிகள், அவைகளின் தமிழ்நாட்டுக் கிளைகள், தமிழ்நாடு அளவிலானக் கட்சிகள் ஆகியவற்றின் பங்கும் சில தில்லித் தலைவர்கள், தமிழகத்தின் பிற முதல்வர்கள் மற்றும் தமிழ்நாட்டிலேயே உள்ள தில்லி மற்றும் கர்நாடகத்தின் கையாட்கள் ஆகியோரின் செயல்பாடுகள் குறித்தும் எழுத இருக்கிறோம்.

தொடரும்


வேர்களின் 19 இதழ்களில் வெளிவந்த காவிரியும் கருணாநிதியும் எனும் கட்டுரைத் தொடர்

**"காவிரியும் கலைஞரும்"**

எனும் தலைப்பில் நூலாக வெளிவந்துவிட்டது.

**விலை 10 உருபா மட்டுமே.**

**தொடர்பு கொள்க**

**அரிமாவளவன்,**

**10அ3 வாத்துக்காரத் தெரு,**

**உறையூர்,**

**திருச்சி 620003**


கட்டுச் சோற்றுக்குப் பெருச்சாளி காவலா?
ஆட்டுக் குட்டியை ஓநாய் புரக்குமா?
கோழிக் குஞ்சைப் பருந்துகாப் பாற்றுமா?
**இந்தி(ய)ப் பாலையில் தமிழ்ப்பூண்டு வளருமா?**
— — பாவிசைக்கோ — —

www.tamilarangam.net

# தமிழின் தனிப்பெரும் சிறப்புகள் -4

இரா. இளங்குமரன்

இளமையில் கல்வி தொடங்கும் போதே எழுத்தின் வழியாக - எழுத்தின் வகைப் பெயர் வழியாக - மெய்யுணர்வைக் கற்றுக் கொள்ள நம் முன்னோர் வகை செய்தனர். அந்த ஆழம், நுணுக்கம், விரிவு என்பவற்றை உணராமலும், உணர்த்தாமலும் கற்பாரும் கற்பிப்பாரும் வெறும் குறியீட்டு அளவில் நின்று விடுகின்றனர்.

உயிரின் இயல்பையும் மெய்யின் இயல்பையும் இவை இரண்டன் இணைந்த இயக்கத்தையும் முற்றாகத் தெளிந்திருந்த அறிவுக் கூர்ப்பாலேயே எழுத்துகளுக்கும் இப் பெயர்களை வைத்துப் போற்றினர்.

உயிர், இயக்கம் உடையது; தானே இயங்குவதுடன், இயங்காதவற்றையும் இயக்குவது. உய் > உய்வு; வாழ்வு; உயிர் உறைவதாலேயே வாழ்வு இயல்கின்றது. தானே இயங்காத உடலை இயக்குகின்றது. இவ்வாறே அமைந்த எழுத்தை உயிரெழுத்து எனல் முறை. உய்த்தல் = செலுத்துதல். உய்ப்பது - உயிர். உயிர்த்தன்மை அமைந்த எழுத்தே உயிரெழுத்து.

உயிரைக் கண்ணால் காணல் இயலாது; காற்றை இயக்கத்தால் அறிந்து கொள்வது போலவே உயிரையும் இயக்கத்தாலேயே அறிந்து கொள்ள முடியும். இயக்கத்தை அறிய - மெய்ப்பிக்க - ஒரு கருவி வேண்டும். அக் கருவியே மெய். உயிரிருப்பையும் இயக்கத்தையும் மெய்ப்பிக்கும் கருவியே மெய். அத் தன்மை அமைந்த எழுத்தே மெய்யெழுத்து.

இயங்கும் உயிரும் இயங்கா உடலும் கூடி இயங்கு நிலை, உயிரொடு கூடிய மெய்யின் நிலையாகும். அத் தன்மையுடைய எழுத்து உயிர் மெய் எழுத்து.

உயிர் தனித்து நிற்கும் ; மெய் தனித்தும் ஆகும்; இரண்டும் இணைந்தும் நிற்கும்;
இரண்டும் பிரியும்; இரண்டும் கூடும்; வாழ்வியல் மெய்ம்மை, எழுத்துக்களைக் கற்கும் போதே கற்றுக் கொள்ள வாய்த்த பெயரீடுகள் இவை.

எழுத்தை மட்டும் தெளிவாகக் கற்றுக் கொண்டால் போதும். தமிழை முழுதுணர்ந்து கொள்ள இயல்பாக முடியும். இதனால்தான், "எழுத்தறியத் தீரும் இழிதகைமை" என்றார் ஒருவர். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்றார் மற்றொருவர்.

கண் காது மூக்கு வாய் தோல் என்பவை ஐம்பொறிகள். காணல் கேட்டல் முகர்தல் சுவைத்தல் தொடுதல் என்பவை ஐம்புலன்கள். புலன்களால் உண்டாவது புலமை அல்லது அறிவு.

ஆதலால், ஐம்புலன்கள் வழியே ஐந்தறிவுகள் உண்டாதலைப் "புலன் நன்குணர்ந்த புலமையோர்" கண்டனர். ஐந்தறிவை 'ஐயுணர்வு' என்றும் கூறினர். இவ்வையறிவும், மற்றை மற்றை உயிரிகளுக்கும் இருக்கவும் கண்டனர். ஆனால், மக்களுக்கு ஐயறிவின் மேம்பட்ட அறிவொன்று விளங்கமாதலை அறிந்தனர். அவ்வறிவு, மனத்தால் அறியப்படுதலால் 'மன அறிவு', 'மெய்யறிவு', 'ஆறாம் அறிவு', 'பகுத்தறிவு' என்றெல்லாம் அதற்குப் பெயர் சூட்டினர்.

ஆனால், ஐயறிவு அளவில் மாந்தருள் சிலரும் அமைந்துவிடக் கண்டனர். அவர்களை, உருவத்தால் மக்களெனக் கொண்டாலும், அறிவு இயல் செயல்களால் மக்கள் எனத் தக்க தகுதி இல்லாதவர்களாய் இருந்ததால் அவர்களை மக்கள் என்று வழங்காமல் 'மாக்கள்' என வழங்கினர். அதனால்,

"மாவும் மாக்களும் ஐயறி வினவே"

என்றார் தொல்காப்பியர். மா என்பது விலங்கு. இதனால்தான் கல்வி அறிவு இல்லாரை,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்"

என்றார் திருவள்ளுவர். அவரே

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு"

என்றும் கூறினார்.

தமிழர்களின் இம் மெய்யுணர்வு மேம்பாடு எழுத்துகளை அமைத்துப் பெயர் சூட்டுதலிலேயே விளங்கச் செய்தனர்.

ஒன்றைப் பார்த்ததும் நெட்டை என்கிறோம். மற்றொன்றைக் குட்டை என்கிறோம். ஒன்றனோடு ஒன்றை ஒப்பிடுதலாலேயே குட்டை நெட்டை எனப்படுகின்றன. இது நீட்டல் அளவைப் பெயர். ஒலி அளவைப் பெயர் மாத்திரை என்பதை அறிந்தோம். அவ்வளவையால் குறிலுக்கு ஒரு மாத்திரை என்றும் நெடிலுக்கு இரண்டு மாத்திரை என்றும் கணக்கிட்டனர்.

ஐ, ஔ என்னும் நெடில்கள், ஒரு மாத்திரையில் கூடியும், இரண்டு மாத்திரையில் குறைந்தும் இருக்கக் கண்டனர். ஒன்றரை மாத்திரை எனக் கணக்கிட்டனர். அதற்கு இயல்பாக ஒரு வாய்ப்பு இருப்பதைத் தெளிந்தனர். ஐ-அய்; ஔ-அவ்; அய், அவ் என்னும் இரண்டும் ஒன்றரை, ஒன்றரை மாத்திரைகள்தாமே. அ-குறில்; ஒரு மாத்திரை ஒற்று - அரை மாத்திரை.

உயிரெழுத்தின் பகுப்பான குறில், நெடில் மாத்திரைகளைக் கண்டோம்; மெய்யின் மாத்திரை அரை எனவும் அறிந்தோம். ஆனால், உயிரும் மெய்யும் கூடிய உயிர்மெய்யின் மாத்திரையைக் காண வேண்டுமே!

க,கா- உயிர்மெய்கள். இவற்றின் மாத்திரை ஒன்றும், இரண்டுதான்.

ஆனால் க் +அ = க. மெய்க்கு அரை உயிர்க்குறிலுக்கு ஒன்று ஆக ஒன்றரை ஆக வேண்டுமே! ஒன்று என்பது சரியாகுமா?

www.tamilarangam.net

க் +ஆ = கா மெய்க்கு அரை; உயிர் நெடிலுக்கு இரண்டு; ஆக இரண்டரை ஆக வேண்டுமே! இரண்டு என்பது சரியாகுமா?

உயிர்க் குறிலைப் போலவே உயிர்மெய்க்குறிலும், உயிர் நெடிலைப் போலவே உயிர் மெய் நெடிலும் ஒரே அளவில் மாத்திரை பெறுதல் எப்படிச் சரியாகும்? என்னும் ஐயம் தோன்றலாம்.

உரையாசிரியர்கள் இதற்கு அருமையான விளக்கம் தருகின்றனர். ஒரு லிட்டர் நீரில், அரை லிட்டர் உப்பைச் சேர்த்தால் ஒன்றரை லிட்டர் இருக்குமா? நீரில் உப்பு கரைவது போல உயிரொடு மெய் சேரும் போது அதன் அளவுகரைந்து விடுகின்றது என்பதாம்.

ஆய்த எழுத்துக்கு மாத்திரை அரை என்றும், சில இடங்களில் கால் மாத்திரை ஆகி வரும் என்றும் முன்னரே கண்டோம். அதற்கு ஆய்தக் குறுக்கம் என்பது பெயர்.

ஆய்தக் குறுக்கம் போலவே, மகரக் குறுக்கம் என்பதும் ஒன்று உண்டு.

கொள்ளும் என்பது 'கொணம்' என்றும்
செல்லும் என்பது 'சென்ம்' என்றும்
செய்யுளில் வருவது உண்டு. இங்கு வரும் - ண், ன் என்பவற்றை அடுத்து வரும் - மகர ஒற்று தன் ஒலியில் பாதியாகிவிடும். ஆதலால் இதனை மகரக் குறுக்கம் என்றனர்.

'வாழும் வகை' என்பதில் 'வ' என்பதன் முன் நிற்கும் 'ம்' என்பதன் ஒலியும் குறையும் அதனால் அதுவும் மகரக்குறுக்கமே.

ஐ, ஔ என்பவை தனித்து வரும் போதுதான் ஒன்றரை மாத்திரை. ஐந்து, கலையம், குவளை, ஔவை என்பவை போலச் சொல்லில் வரும்போது குறில் அளவாகிவிடும். அவற்றுக்கு ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் என்பவை பெயர்கள். இப்படியே குறுகி வரும் 'இ'யும் 'உ'வும் உண்டு. அவை குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பன. அவையும் அரை மாத்திரையே.

குறுகும் எழுத்து உண்டானால், நீளும் எழுத்தும் இருக்கும் அல்லவோ. அவற்றுக்கு அளபெடை என்பது பெயர். அளபு எடுப்பது (கூடுவது) அளபெடை. உயிரளபெடை ஒற்றளபெடை என அளபெடை இரண்டாம்.

உயரமான கட்டடம் மால்; உயரமான ஒருவர் மால். இந்த உயர்வைக் காட்ட அளபெடை உதவுகிறது; 'மா அல்' இரண்டு மாத்திரை 'ஆ' மேலும் ஒரு மாத்திரை சேர்த்து ஒலிக்கத் தன் குறில் அடையாளத்தைக் கொண்டு (அ) அளபெடை ஆகின்றது. 'ஆய்' என்பவன் வள்ளல்களுள் ஒருவன். அவன் 'ஆஅய்' எனப்பாடு புகழ் பெற்றான்.

கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என்பவை திருக்குறள். இவை உயிர் எழுத்துகள் அளபெடுத்ததால் உயிரளபெடை.

'கம்ம்' என்று முல்லை கமழ்கிறது.
'இம்ம்' என்று வண்டு இசைக்கிறது.
'டண்ண், டண்ண்' என்று மணியடித்தது.
'சர்ர்ர், சர்ர்ர்' என்று வாள் அறுத்தது.
இப்படி ஒலி நீட்டத்திற்கு ஒற்றெழுத்து மிகுந்து வருதல் ஒற்றளபெடையாகும்.

இப்படியெல்லாம் எழுத்தொலிகள் குறையவும் நீளவும் வேண்டுமா? வாழ்க்கையை ஊன்றிப் பாருங்கள். மேடைப் பேச்சை இசையரங்கை ஈடுபட்டுக் கேளுங்கள். ஒலி நீளல், ஒலி குறைதல் தேவை வெளிப்படப் புலப்படும்.

அப்படியானால் வாழ்வியல் நுணுக்கம் - தேவை - கருதியே எழுத்துகள் அமைக்கப்பட்டனவா? ஆம்! அதுவே உண்மை! தமிழ் இலக்கணமே வாழ்வியல் இலக்கணம்தான்.

அது; இது
அவை இவை
அவன், இவன்
அவள் இவள்
அவர் இவர்
இப்படி ஐம்பாலையும் சுட்டிக் காட்டுகிறோமே. 'அ' அப்பால் இருப்பதையும் 'இ' இப்பால் இருப்பதையும் சுட்டிக் காட்டவில்லையா? இவற்றுக்குச் சுட்டெழுத்து என்பது பெயர்.

முன்னாளில் 'உ' என்பதும் சுட்டெழுத்தாக இருந்தது. அது, இது போல 'உது' என்பதும் இருந்தது. அவன், இவன் போல 'உவன்' என்பதும் பிறவும் இருந்தன.
'உ' என்பது அப்பாலும் இல்லாமல் இப்பாலும் இல்லாமல் இடையே நின்று புறம் காட்டுவதாய் இருந்தது.

"உப்பக்கம் காட்டி விடும்" என்பது திருக்குறள். அக்கரையும் ஆகாமல் இக்கரையும் ஆகாமல் இடையே அமைந்த கரை உக்கரை, உக்கரைப்பட்டி என்பவை. அவை ஒக்கரை, ஒக்கரைப்பட்டி என வழங்குதல் ஒப்பிலியப்பனை, உப்பிலியப்பன் ஆக்கிவிட்ட 'திருகு' வேலைதான்!

'அ இ உ மூன்றும் சுட்டே" என்பது இலக்கணம். ஒவ்வொன்றையும் தெரிந்து கொள்ள விரும்பும் காலத்தை வினாத் தெரிந்த காலம் என்பது வழக்கம். வினாத் தெரிந்த காலம் என்பது வினாவத் தெரிந்த காலம் என்பதாம். வினாவப் பயன்படும் எழுத்துக்கள் இவை என்பதையும் நம் முன்னோர் கண்டனர்.

(எ-டு) என்ன எங்கு எது எப்படி எவ்வாறு
யாவன் யாது யாவை யாங்கு
அதுவா அவனா அதுவோ அவையோ
ஏன் ஏது என்னே எங்கே.

எ, யா, ஆ, ஓ, ஏ இவ்வைந்து எழுத்துக்களும் தாமே வினாவை எழுப்புகின்றன. எவர் வாழ்வில் உள்ளேயும் வெளியேயும் வினாவை எழுப்பி எழுப்பி விடை காண்கிறாரோ அவர் "விளங்கு அறிவ"ராகத் திகழ்கின்றார். அவ் வாழ்வியல் பேற்றுக்காக அமைந்த எழுத்துக்கள் இவை.

எழுத்தமைதி, வாழ்வியல் அமைதி எனின், தமிழ் என்பதே தமிழ் வாழ்வு தானே! அதனால்தான் "தமிழுயரத் தமிழன் உயர்வான்" எனத் தமிழ் மேலோர் கூறுகின்றனர். ...தொடர்வோம்

www.tamilarangam.net

# தமிழர் பெருவிழா, திருச்சிராப்பள்ளி

**31.10.99**

**தீர்மானங்கள்.**

1. காவிரி ஆற்றுரிமை

காவிரி நீரைக் கொண்டு கர்நாடகம் 11,20,000 குறுக்கங்களுக்கு மேல் பாசனப் பரப்பை அதிகரிக்கக் கூடாது என்ற நடுவர் மன்ற இடைக்கால ஆணையையும், அதே போல் குச்ரால் காலத்தில் வரைவுத் திட்டம் இருந்ததையும் 1998 ஆகற்று திங்களில் தமிழக முதல்வரை தில்லிக்கு அழைத்து, அவைகளை முற்றாக நீக்கம் செய்து ஒரு உதவாக்கரை ஆணையத்தை ஏற்படுத்த ஒப்புக் கொண்ட முதல்வரையும், அவரை மிரட்டி அதில் கையெழுத்துப் பெற்ற தலைமை அமைச்சர் வாச்பேயையும் இக் கூட்டம் கடுமையாகக் கண்டிக்கிறது. குச்ரால் காலத் திட்டத்தைக் கொண்டுவர மைய அரசுக்கு முழு அதிகாரம் சட்டத்தில் உள்ளது. மைய அரசு அவ்விதம் செய்யத் தவறினால் தமிழகம் தன் காவிரி உரிமையை நிலைநாட்டப் பெரும் போராட்டத்தில் இறங்க வேண்டிவரும் என இம்மாநாடு மைய மற்றும் தமிழக அரசுகளை எச்சரிக்கிறது.

2. மீனவத் தமிழரின் தற்காப்பு

30,00,000 மீனவத் தமிழர்களின் வாழ்வு சிங்களக் காடையரின் கைகளில் விடப்பட்டு உள்ளது. கடலோடிப் பிழைக்கும் அவர்களை கைது செய்து சிங்களச் சிறையில் அடைப்பது, அவர்களின் வலைகளையும், மீன்களையும் தட்டிப்பறிப்பது, ஏன்?, அவர்களையே கேட்பாரின்றி சுட்டுக் கொல்வது என்ற நிலை நீடிக்கிறது. சிங்களக் கடற்படையின் இந்தத் தொடரும் கொடுஞ் செயல்களைத் தடுத்து நிறுத்த மைய, தமிழக அரசுகள் தயாராக இல்லை. இதுவரை 360க்கும் மேற்பட்ட மீனவத் தமிழர்களின் உயிர்களை சிங்களக் கடற்படை பறித்துள்ளது. அரசு அவர்களின் உயிர்களைக் காக்கும் கடமையில் தவறிவிட்டது. சட்டப்படி தற்காப்புக்கு ஆயுதம் தரிக்கும் உரிமை மக்களுக்கு உண்டு. எனவே கடலோடும் ஒவ்வொரு மீனவத் தமிழருக்கும் குறிப்பாக இராமேசுவரத்தை ஒட்டியுள்ள மீனவர்களுக்கு நவீன கைத்துப்பாக்கி ஒன்றை தமிழக அரசு வழங்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

3. உளவுப்படை

தமிழக அரசு, தமிழர்நாட்டில் உள்ள தமிழ் உணர்வாளர்கள் பட்டியலைத் தயாரிக்க, கண்காணிக்க ஒரு தனி உளவுப்படையை வைத்துள்ளது. இது 6 கோடித் தமிழர்களின் தன்மானத்திற்கு விடப்பட்ட அறைகூவலாகும். தமிழ்நாட்டின் உரிமைகளைப் பற்றிப் பேசும் எவரையும் துன்புறுத்தும் நோக்கம் கொண்டதாகும். தமிழ்நாட்டைப் பார்ப்பன - பனியா ஆதிக்க நடுவணரசின் அடிமை நாடாக வைத்திருக்கச் செய்யும் சூழ்ச்சியின் ஒரு அங்கமாகும். தமிழர்களின் வாக்கால் ஆட்சிக்கட்டில் ஏறியுள்ள தமிழக அரசு இந்த உளவுப்படையை தாமதம் ஏதுமின்றிக் கலைத்துவிட வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகிறது.

4. கண்ணகிக் கோட்டம்.

தமிழகத்தின் மரபுசார் வரலாற்றுச் சின்னமும், 1800 ஆண்டுகால வரலாறு உடையதுமான கண்ணகி கோட்டத்திற்குத் தமிழர்கள் செல்ல கேரள அரசு ஆண்டுக்கு ஒரு முறையே விடுகிறது. இதிலும் கெடுபிடிகளும் தொல்லைகளும் ஏராளம். 30.8.99 அன்று அங்கு சென்ற அமைச்சர் தமிழ்க் குடிமகனை சாதாரண ஒரு காட்டுவளத்துறை ஊழியரே மடக்கித் திருப்பி அனுப்பிய இழிநிலை நடந்துள்ளது. எனவே வெள்ளையர் காலத்தில் தமிழக எல்லைக்குள்ளேயே போடப்பட்ட பாதையைத் தமிழக அரசு மீட்டுச் சீர் செய்ய வேண்டும். மேலும் ஒரு மலைவழிச் சாலை ஒன்றையும் நம் மலைப் பகுதி வழியே அமைக்க வேண்டும். கண்ணகி கோட்டத்தை அழிவிலிருந்து மீட்டு செப்பனிடுவது அவசியம்.

5. நிலம் வாங்கத் தடை

தமிழக எல்லைக்குள் பிற மாநிலத்தவர் நிலம் வாங்குவதைத் தடை செய்வது மிக மிக அவசரத் தேவையாகி உள்ளது. அத்தகையத் தடையைத் தமிழக அரசு பிறப்பிக்க இக் கூட்டம் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

6. தமிழே பயிற்று மொழி

தமிழக அரசு அமைத்த தமிழ் பயிற்றுமொழிக் குழுவின் அறிக்கையே குறை உடையது. அதை மேலும் மூளியாக்க தமிழக அரசு முனைந்திருப்பது கண்டிக்கத்தக்கது. குறைந்த அளவு நீதியரசர் மோகன் குழுவின் பரிந்துரைகளையாவது தமிழக அரசு முதலாவதாக ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

7. கச்சத்தீவு.

www.tamilarangam.net

வேர்கள்
மாத இதழ்
தனிச்சுற்றுக்கு மட்டும்
வேர் 4
மலர் 4.5
தனி இதழ் விலை 4 உரூபா
ஆண்டுக்கட்டணம் 50 உரூபா
வாழ்நாள் கட்டணம் 500 உரூபா
தொடர்புக்கு
அரிமாவளவன்.
10அ3 வாத்துக்காரத் தெரு.
உறையூர்.
திருச்சி — 620003

திரு குணா அவர்கள் எழுதிக்கொண்டிருக்கும் மண்ணுரிமை என்னும் நூலின் ஒரு பகுதி

# அகரகாரப் பொருளியல்

(முன் இதழ் தொடர்ச்சி)

குணா

***கழனி முதல் கானல் வரை***

பழந்தமிழர்கள் நிலத்தைப் பாகுபடுத்திய முறை மிக நுட்பமானது. உழப்பட்ட நிலக்கைப்பற்றுக்குப் பெயர் வயல்; நெல்லடிக்கும் நெற்களத்துடன் கூடிய

—.......

முன்பக்கத் தொடர்ச்சி ..... (தீர்மானங்கள்)

தமிழகத்திற்குச் சொந்தமானதும், தமிழர்களைச் சிங்களப்படை தாக்க வசதிப்பட்டு விட்டதுமான கச்சத்தீவை இலங்கை அரசிடமிருந்து இந்தியா திரும்பப் பெற வேண்டும். இந்தியக் கடல் எல்லைக்குள் சிங்களக் கடற்படை நுழைவதைத் தடை செய்ய வேண்டும்.

8. சேது கடல் திட்டம்

சேது கடல் திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசுநடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்ததும் கொழும்பு அரசு மீண்டும் தலையிட்டு அந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போட முயல்கிறது. இந்திய அரசும் நேரு கொள்கை வழியே செல்ல நினைத்து தன் அறிவிப்பை மாற்றிச் சொல்கிறது. இனியும் தாமதம் இன்றி சேதுகடல் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

9. பெரிய நடுத்தர துறைமுகம்

குளச்சல் துறைமுகத்தைப் பெரிய துறைமுகமாக ஆக்க அனைத்துத் தகுதியும் உள்ளது. தமிழகப் பொருளியல் செழிக்க அதை ஒரு பெரிய துறைமுகமாக மாற்ற கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வாலிநோக்கம், நாகை போன்ற 6,7 நடுத்தரத் துறைமுகத் திட்டங்களையும் இந்திய அரசு எடுத்துக் கொண்டு நிறைவேற்ற வேண்டும் எனவும் தமிழக அரசு நடுவணரசை வற்புறுத்த வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

10. திருவள்ளுவர் சிலை

தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் தமிழரல்லாத் தலைவர்களுக்குச் சிலைகள் உண்டு. ஆனால் உலகப் பொதுமறையாம் திருக்குறளை உலகிற்கு ஈந்த திருவள்ளுவரின் சிலைக்கு பெங்களூரில் இடமில்லை. எட்டு ஆண்டுகளுக்கு மேலாக கோணிப்பையால் அவர் முகத்தை மூடி, தமிழினத்தின் மீது இழிவைச் சுமத்துகிறது கன்னட வல்லாதிக்க வெறி அரசு. வரும் தமிழ்ப்புத்தாண்டில் அப் பெருமகனாரின் சிலையைத் திறந்துவிடுவதென திருவள்ளுவர் சிலை திறப்பு இயக்கம் முடிவு செய்துள்ளது. இம் முடிவுக்கு இக்கூட்டம் முழு ஒத்துழைப்பும் ஆக்கபூர்வமான ஆதரவும் அளிப்பதென முடிவு செய்கிறது.

11. தூக்குதண்டனையைத் திரும்பப் பெற வேண்டும்.

அரசியல் குற்றவாளியான முன்னாள் இந்திய தலைமையமைச்சரும், தகரிப் பேர ஊழல் நாயகனுமான இராசீவைக் கொன்றொழித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு கொலைத் தண்டனை பெற்றுள்ள நான்கு தமிழர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று இந்தியக் குடியரசுத் தலைவரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலமே கழனி; களமர் போன்ற அடிமைகளைக் கொண்டு உழுவிக்கப்பட்ட பள்ளநிலம்தான் பண்ணை; நீரைப் பாய்ச்சிச் சேறாகக் குழப்பி உழுத நிலத்திற்குப் பெயர் செரு; நெல்லும் தினைகளும் சாமையும் விளைந்த நிலமே செய்; மிகவும் பழமை வாய்ந்த பயிர்நிலத்திற்குப் பெயர்தான் முதை; ஒரு புதிய புன்செய் நிலத்திற்குப் பெயர் இதை; ஆற்றுப் புரவும் ஏரிப்புரவும் கொண்ட நன்கு உழப்பட்ட நீர் நிலமே நன்செய்; கிணற்றுப்புரவுக்கு ஆட்பட்ட அல்லது வானம் பார்த்த நிலமே புன்செய்; மிக மிகப் பழமையான நீர்நிலமே பழனம்; காடுகளை வெட்டித் தீயிட்டுக் கொளுத்தியதால் வந்த முல்லை நிலத்துப் புன்செய் நிலமே கொல்லை; குன்றங்களின் மீது ஒரே கொல்லையில் திரும்பத் திரும்பப் பயிரிடாமல், இடம்விட்டு இடம் மாறிப் பயிரிடப்பட்ட (Shifting Cultivation) நிலமே புனம்; காய்ந்த நிலத்தை உழுது புழுதியாக்கி விதைத்தபின், அவ் வித்துக்கள் முளைக்க மழைக்காகக் காத்திருந்த நிலத்திற்குப் பெயர் புழுதிக்காடு; மழையை நம்பிக் கிடக்கும் நிலமே வானாவாரி; பயன்பாட்டில் இல்லாத அரசு நிலத்திற்குப் பெயர் புறம்போக்கு; பயிரிடப்படாது கிடக்கும் புல் முளைத்த நிலமே தரிசு; செம்மண் நிலத்திற்குப் பெயர் சிவல்; களிமண் நிலம்தான் கரிசல்; மேட்டுநிலம்தான் சுவல்; தாழ்வான நிலமே அவல்; முள்செடிகளாலோ முள்ளாலோ வேலியிடப்பட்ட நிலத்திற்குப் பெயர் வேலி; மிளகாய் போன்ற செடிகள் விளைந்த நிலமே தோட்டம்; தென்னை, மா போன்ற மரங்கள் விளைந்த நிலத்திற்குப் பெயர் தோப்பு; முல்லைநிலத்திலும் குறிஞ்சிநிலத்திலும் உள்ள அடர்ந்த மரப்பகுதிதான் காடு; மிக மிக அடர்த்தியான காட்டிற்குப் பெயர் அடவி; அடர்ந்த மரங்களையுடைய இயற்கைத் தோட்டமே சோலை; பாதுகாக்கப்பட்ட சோலைக்குப் பெயர், கா; கடற்கரை அருகிலுள்ள சோலைதான் கானல்; மக்கள் வாழாத காட்டுக்குப் பெயர் வனம்;[137] பயிரிடத்தக்க அல்லது பயிரிடப்பட்ட நிலத்தின் பெயர், விலை.

## வெள்ளாளரும் காராளராயினர்!

உழுவித்து உண்டுவந்த வேளாளனை வெள்ளாளன் என்பது வடுக அநாகரிகரின் படையெடுப்புகளுக்கு முந்தைய தமிழர் வழக்கமாகும். வெள்ளாளர், காராளர் என்னும் வேற்றுமை, வடுக அநாகரிகரின் படையெடுப்புகளுக்கு முன்னர் தமிழரிடம் விளங்கிவந்த காணியுறவுகளாகும். உழுதுண்டு வந்த வேளாளனைக் காராளன் என்றனர். இவர்களை முறையே வெண்களமன் என்றும் கருங்களமன் என்றும் கூறுவர். சேலம் சேரவரையன் மலையிலுள்ள மலையாளிகளில் ஒரு பிரிவினர் தங்களைக் 'காராளர்' எனச் சொல்லிக்கொள்வர்.[138] வடுக அநாகரிகரிடம் தங்களின் காணிகளைப் பறிகொடுத்த தமிழ் வெள்ளாளர்கள், அவ் வடுக வந்தேறியர் காலத்தில் காராண்மையாளர் என்னும் புதிய பெயரைப் பெற்றனர். அத்தொடு, பெயரளவில் பெருங்குடிமக்கள் எனப்பட்டனர். அவர்களில் சிலர், கீழ்க்குடிகள் என்றும் ஆயினர். முந்தைய காராளரோ, உழுகுடி என்னும் புதுப் பெயருடன் தரம் தாழ்ந்தனர்.

இந் நிலையில், வடுகச் சோழர் காலத்தில் நிலவிய காணியுறவுகளின் அடுக்கின் உச்சியில் அரசன் வீற்றிருந்தான். அந்த அரசனுக்கு அடுத்துப் பிரமதேயங்களின் வடுகப் பிராமணப் பெருங்குடிமக்களும் (சபையாரும்), வெள்ளாளரின் உடைமைகளாயிருந்த ஊர்களின் காராண்மையாளரும் (occupancy holders) இருந்தனர். இடைத்தரகர் யாருமின்றி அரசனுக்கு நேரடியாகவே இறையையும் வரிகளையும் காணிக்கடனாகச் செலுத்திவந்த வெள்ளான்வகை ஊரிலிருந்த பெருங்குடிமக்களைக் காராண்மையாளர் அல்லது காணியாளர் என்றனர். காணியாளருக்குத் தத்தம் காணிகளின்மீது காராண்மை அல்லது காணியுரிமை (cultivating right) இருந்தது. பெருங்குடிமக்களிடமிருந்த நிலங்களைப் பெருங்குடிப்பற்று என்றனர். காணிக்கடனைக் கட்டியது போக, ஒரு நிலத்தின் முழுப் பயனையும் நுகரும் உரிமையுடையோராக அந்தக் காராண்மையாளர்கள் இருந்தனர். ஓர் ஊரில் சொந்தமாக நிலம் வைத்திருந்தோனை உடையான் என்றனர். ஊரிலிருந்த குடும்பங்களின் பெரியோர்களைக் கிழவர் என்றனர். இவர்கள் தாம் ஊரவையினரான ஊரார் ஆவர்.

பெருங்குடிமக்களுக்குக் கீழே, அவர்களிடமிருந்து காணிகளைக் குடிக்கூலிக்கு எடுத்திருந்த கீழ்க்குடிகள் (கீழ்க்குடிகளிலார் அல்லது கீழ்க்காராண்மை உடைய குடிகள்) இருந்தனர். இக் கீழ்க்குடிகளுக்கும் கீழே, நிலத்தில் நேரடியாக இறங்கி உழுது விளைவித்த உழுகுடிகள் (உழுகுடிமக்கள் அல்லது உழுதான் குடிகள் அல்லது குடிமகன்கள்) இருந்தனர். பிற்காலத்தில் இவர்களை உழுகுடி வெள்ளாளர் என்றனர். காணியுரிமை கொண்ட பெருங்குடிமக்களுக்குக் கீழ்க்குடிமக்கள் கட்டிய வெள்ளாண்மைப் பங்கை மேலாட்சி அல்லது மீயாட்சி அல்லது மேல்வாரம் என்றனர். மேலாட்சியை(மேல்வாரத்தை)ச் சங்கதத்தில் 'போகம்' என்றனர். காராண்மையாளரின் காணிகளைக் குடிக்கூலிக்கு எடுத்து உழுதுண்டுவந்தவர்களுக்கு வெள்ளாமையில் கிடைத்த பங்கைக் கீழாட்சி அல்லது கீழ்வாரம் என்றனர்.[139]

காணியுரிமை என்பது கால்வழி உரிமை (hereditary right). இஃது ஒரு முற்றுடைமை. காணியுரிமை என்னும் சொல்லுக்கு ஈடாக 'மிராசு' என்னும் பாரசீகச் சொல்லை ஆங்கிலேயர் காலத்தில் ஆண்டனர். உழவுக்காணி என்னும்போது மட்டும் அஃது உழுதுண்ணும் அல்லது உழுவித்துண்ணும் உரிமை எனப் பொருள்பட்டது. இக் காணியில் நன்செய், புன்செய், ஊர் நத்தம், குளம், புலைச்சேரி ஆகியனவெல்லாம் அடங்கின.

கீழ்க்குடிகள், உழுகுடிகள், கொத்தடிமைகள் ஆகியோர்மீது மிக அழுத்தமாகக் குந்திக்கொண்டிருந்த சுரண்டல் உறவுகளும் அடிமைத்தனமும் சாதி ஒடுக்கலும் அவர்களை அவ் வூரைவிட்டே பெயர்ந்து போக ஒண்ணாமல் செய்வதில் அகரகாரப் பெருங்குடிமக்களும், கோயில்–மடவளாக அதிகாரிகளும் பெரும் கண்ணாயிருந்தனர். இந்த அகரகாரப் பொருளியலை அடிப்படையாக வைத்தே, வந்தேறி வடுகரின் அரசுகளிலும் ஆட்சிகளிலும் விளங்கிய வாரம், குத்தகை ஆகிய உழவடை முறைகள் கட்டுக்கோப்பாக வடிக்கப்பட்டன.

## குடிநீக்காக் காராண்மையும், குடிநீக்கிய காராண்மையும்

ஒரு காணியை விற்கவோ, பிறருக்கு எழுதிவைக்கவோ செய்தபோது, அந்த நிலத்தின் காராண்மையாளர் அந் நிலத்தில் கீழ்க்குடிகளாகவோ உழுகுடிகளாகவோ இருந்தவர்களிடம் இவ்வளவு மீயாட்சியும் (மேல்வாரமும்) குடிமையும் வரிகளும் கட்ட வேண்டும் என்றிருந்த பழைய குடியுடன்படிக்கையை நீக்கியோ, நீக்காமலோ, அந் நிலத்தை விற்கும் வழக்கம் பல்லவர் காலத்திலேயே இருந்தது. ஒரு காணியில் உழுதுண்டுவந்த கீழ்க்குடிகளுடனும் உழுகுடிகளுடனும் செய்துகொண்ட பழைய குடியுடன்படிக்கை இனிச் செல்லாது என நீக்கிவிட்டு, அந் நிலத்தை வாங்கவோ கொடையாகப் பெறவோ [illegible]ப்படுத்தவோ செய்தவருடன் அக் கீழ்க்குடி

www.tamilarangam.net

களும் உழுகுடிகளும் புதிதாகக் குடியுடன்படிக்கையைச் செய்துகொள்ள வழிவகுத்த நிலவுடைமை மாற்றத்தைக் **குடிநீக்கிக் காராண்மை** என்றனர். விற்கப்படவோ கொடையாகத் தரப்படவோ கையகப்படுத்தவோ நேர்ந்த ஒரு நிலத்திலுள்ள கீழ்க் குடிகளும் உழுகுடிகளும் முந்தைய காராண்மையாளருடன் செய்துகொண்ட பழைய குடியுடன்படிக்கையை நீக்காமலும் கைவிடாமலும் புதிய காராண்மையாளர் அதை அப்படியே நீட்டித்ததைத்தான் **குடிநீக்காக் காராண்மை** என்றனர்.[140]

குடிநீக்கிக் காராண்மையின்கீழ், புதிய குடியுடன் படிக்கையில் இன்னின்ன மாற்றங்கள் வேண்டுமென முன்மொழியும் உரிமை, நிலத்தை வாங்கிய புதிய காராண்மையாளருக்கு இருந்தது.[141] அந்த மாற்றங்களை ஏற்பதும் ஏற்காததும் பழைய காராண்மையாளரின் விருப்புவெறுப்பைப் பொறுத்தது. குடிநீங்காக் காராண்மை மாற்றத்தின்கீழ், காணி கை மாறியபோது இருந்த மீயாட்சி (மேல்வாரம்), குடிமை, வரிகள் ஆகியவற்றிலான அளவுகளே தொடர்ந்து நீடிக்க வேண்டுமேயன்றி, அவற்றை மாற்றக் கூடாது.

குடிநீங்காக் காராண்மை என்னும் **கீழ்க்காராண்மையின்கீழ்**, அளவை மாற்றாது ஒரே அளவிலேயே தொடர்ந்து காணிக்கடனைச் செலுத்திவந்த வழக்கமும் இருந்தது. அதை வாடாக் கடன் **(நிலை இறை)** என்றனர்.[142]

### கடமையும் குடிமையும்

பெருங்குடிமக்கள் என்றோ, மேல்குடி என்றோ அழைக்கப்பட்ட காராண்மையாளரோ —ஒரு நிலத்தைக் கொடையாகப் பெற்றவரோ — அரசனுக்குக் கட்ட வேண்டிய கட்டணமே கடமை எனப்பட்டது. ஒரு நிலத்தின்மீது காணியுரிமை கொண்டிருந்ததால் கட்ட வேண்டியிருந்த காணிக்கடன் அஃதாகும். அரசனுக்குக் கட்ட வேண்டிய இறை தவிர, நெல்லாகவோ காசாகவோ ஊழியப்பணி வழியாகவோ நாட்டுக்கும் ஊருக்கும் செலுத்த வேண்டிய காணிக் கடன்கள் இருந்தன. இறையுடன்கூட, நாட்டு ஆட்சிக்குக் கட்ட வேண்டிய நாடாட்சி, ஊராட்சிக்குக் கட்ட வேண்டிய சிற்றாயம் அல்லது சில்வரி போன்ற கட்டணங்களும் பணிகளும் பிற வரிகளும் சேர்ந்து ஒட்டுக்காகக் காணிக்கடன் எனப்பட்டது. நாட்டுச்செலவுக்காக நாட்டார் என்னும் நாட்டு அவையினரால் தண்டப்பட்ட நாடாட்சி என்னும் வரி, புன்செய் நிலப்பகுதிகளிலேயே பெரும்பாலும் வாங்கப்பட்டது. ஊரவையாரிடம் ஊருக்கெனக் கட்டிவந்த வரியை **ஊரிடுவரிப்பாடு** அல்லது **ஊராட்சி** என்றனர்.

காணியுரிமையுள்ள பெருங்குடிமக்கள் அரசனுக்குச் செலுத்தி வந்த இறைதான் 'கடமை' என்றாயின், அம் மேல்குடியினரிடமிருந்து நிலத்தை எடுத்து உழுதுண்டுவந்த உழுகுடிமக்களும் நில்லாக் குடிகளும் (tenants-at-will) அரசனுக்கோ அவனது பணியாளருக்கோ நாட்டிற்கோ ஊருக்கோ கோயிலுக்கோ ஆற்றிவந்த கட்டாயப் பணியே குடிமை ஆகும். இந்தக் குடிமையைக் காசாகவோ நெல்லாகவோ கட்டிவந்தனர்.[143]

ஆறு, ஏரிக்கரைகளை எழுப்புவதும் அவற்றைச் செப்பனிடலும் பேணலும் (காவிரிக்கரையில், 'செய்கரை' என்னும் பொருள்பட இதைக் குலை என்றனர்); ஆறுகளுக்குக் குறுக்கே குறுஅணைகளான குரம்புகளைக் கட்டி ஆற்றுநீரைக் கால்வாய்களில் மடைதிருப்புதல்; ஆற்றில் புதுப்புனல் வரும் முன்னர் வண்டல் அடையைத் தூர்வாருவதும், ஆற்றுப்பெருக்கின்போது வயற்கால்களை வெட்டுவதும் ஆகிய செந்நீர் வெட்டி முதலான பணிகள் குடிமைக்குள் அடங்குவன. இவற்றுடன், அரசனும் அவனது பரிவாரங்களும் வரும்போது செய்ய வேண்டிய பணிவிடையாகிய திருவெழுச்சிக் கடமை, அரண்மனைக் காவலுக்கு ஊருக்கு இவ்வளவு பேர் என அனுப்பப்பட்ட பணியான திருக்கொற்றவாசல் அல்லது திருவாசல்போந்த குடிமை ஆகியனவும்கூடக் குடிமையின்கீழ் வருவன.[144] தேவதான ஊர்களில், அரசனுக்கு மாறாக அந்தப் பணி ஊர்த்தெய்வத்திற்கு ஆற்றப்பட்டது.[145] கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் மட்டுமே சுமக்க வேண்டிய இயல்பால் வேறுபட்ட எதிர்பாராத பணிகளையே குடிமை என்றனர். ஊருக்கும் நாட்டுக்கும் பொதுவாகக் காலத்தால் வந்துற்ற பணியும் செலவுமே **குடிமை எனப்பட்டது.**[146]

காணியாளனே கீழ்க்குடியாகவோ உழுகுடியாகவோ இருந்த நிலையில், இக் குடிமை அவனால் கட்டப்பட்டது. கீழ்க்குடிக் காராண்மையாளர்களோ நில்லாக்குடிகளோ உழுகுடிமக்களின் சார்பாக அக் குடிமைப் பணத்தைக் கட்டிவந்ததும் உண்டு.[147] "பிராமணரிடமிருந்தும் வெள்ளாளரிடமிருந்தும் குடிமைப்பணம் எதையும் வாங்கக் கூடாது."[148] என்னும் மன்னார்குடிக் கல்வெட்டு, அக் குடிமையைப் பெருங்குடிமக்களிடமிருந்து தண்டவில்லை என்பதைக் காட்டும். குடிமை, (பொதுவாகக் காசாகவே வாங்கப்பட்ட) **அந்தராயம்** போன்ற சில்லிறைகள், நாட்டாரும் ஊராரும் கூடி முடிவெடுத்த பிற தீர்வைகள் ஆகிய அனைத்தையும் கீழ்க்குடிமக்களும் உழுகுடிமக்களுமே செலுத்த வேண்டியிருந்தது.

காவலில் போந்த குடிமை, காவீந்த குடிமை, கொற்றவாசலில் போந்த குடிமை (திருக்கொற்றவாசலால் போந்த குடிமை), வாயில் போந்த குடிமை (வாசலில் போந்த குடிமை), கோயில் வாசலால் போந்த குடிமை (திருவாசல் குடிமை, திருவாசலால் வந்த குடிமை, திருவாசலில் போந்த குடிமை), திருவெழுச்சிக் குடிமை, வாரக்குடிமை, முதலான குடிமைகள் சோழநாட்டில் வழக்கிலிருந்தன.

### பற்றுகள்

ஊருக்குள் குடியிராது வேற்றூரில் வாழ்ந்துகொண்டு ஒரு நிலத்தை உழவடைக்கு எடுத்து நில்லாக்குடியினராக உழுதுண்டோர் எல்லாம் **புறக்குடிகள்** ஆயினர். இவர்களுக்கு உழவடையாக விடப்பட்ட காணியைப் **புறப்பற்று** என்றனர். இப் புறக்குடிகள் எல்லாம் **புறவரி** என்னும் தனி வரியைக் கட்ட வேண்டியிருந்தது.

பிறங்கடை (வாரிசு) இல்லாது மாண்டவரின் நிலத்தையும், கடமை கட்டாமல் ஓடி ஒளிந்தவரின் காணியையும் ஊரவையே எடுத்து விற்கவோ அதன் சொந்தக்காரனின் நெருங்கிய உறவினனுக்கு அதை மாற்றி எழுதவோ செய்தது. ஆண் மகவு இல்லாதவனின் காணி, பெண்மகவுக்கும் —அதன் வாயிலாக அவனது மாப்பிள்ளைக்கும்— சில சூழ்நிலை களில் மாண்டவனின் உறவினனுக்கும்—பெண் வழியிலேயே அளிக்கப்பட்டது. "அறுதி பண்ணுகிற இடத்துப் பொலியூட்டு பெண்வழியும் வரும் என்று ஸ்ரீமகேஸ்வரர் நிச்சயித்தமையில்" என வரும் கி. பி. 1166ஆம் ஆண்டு திருக்களர் கல்வெட்டு அதைக் காட்டும்.[149]

நிலவுடைமைகளும் காணிப்பற்றுகளும் பல்வகைப்பட்டன. அரசனுக்கோ சிற்றரசனுக்கோ சொந்தமாயிருந்த நிலங்கள்தாம் **அடைநிலங்கள்**. நாடாள்வாரைப் போன்ற ஆண்டைகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களைக் **காணிப்பற்று** (ஜீவிதம்) என்றனர். பிராமணரல்லாத வேளான்குடியினரின் காணிகளை **ஊர்க்காணிகள்** என்றனர். சிவன் கோயிலுக்கு இறையிலியாக விடப்பட்ட காணியே **தேவதானம்**. மால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோயிலுக்கான இறையிலி நிலமே திருவிடையாட்டம். அருக(சைன)ரின் பள்ளிகளுக்குக் கொடையாகத் தரப்பட்டதே பள்ளிச்சந்தம். படைஞர்க்குச் சொந்தமான காணிதான் படைப்பற்று. அரசனோ ஆள்வானோ அழைக்கையில் படைப்பணி செய்ய வேண்டும் என்னும் கடப்பாட்டை உடையவர்க்கே படைப்பற்று தரப்பட்டது. கோயில் நிலத்தின் காராண்மையாளரைக் கோயில்பற்றுடையார் என்றனர்.

அரசனுக்கு நேரடியாகக் காணிக்கடன் கட்ட வேண்டியிருந்த முழுக் காராண்மையுரிமை கொண்ட பிராமணரல்லாக் காணியாளரின் நிலமே வெள்ளான்வகைக் காணியாகும். இதற்கான காணிக்கடனை நாடு அல்லது ஊர் வழியாகவோ, குறிப்பிட்ட ஒருவரின் வழியாகவோ செலுத்த வேண்டியிருந்தது.

**பல்லவன் கொணர்ந்த பிரமதேயம்**

மன்னர்கள் கொடையாக அளிக்க, பிராமணர்கள் மட்டுமே நிலவுடையார்களாயிருந்த ஊர்கள் தாம் பிரமதேயங்கள். பிரமதேய அல்லது தேவதான ஊராரே முதல் காராண்மையாளராக—காணிக்கொடை பெற்றவராக — இருக்கையில், அவர்களுக்கும் கீழே கீழ்க்குடிகளிலார்கள் அல்லது கீழ்க் காராண்மையாளர்கள் இருந்தனர். நேரடியாக நிலத்தை உழுது விளைவித்துவந்த உழுகுடிமக்கள் அல்லது உழுதான்குடிகள் என்னும் நில்லாக்குடிகள் (tenants-at-will) அவர்களுக்கும் அடியில் இருந்தனர்.

பல்லவர் காலத்தில் தோன்றிய பிரமதேயங்கள், இடைக்காலச் சோழர் காலத்தில் மளமளவெனப் பல்கிப் பெருகின. ஆயினும், பிரமதேயங்கள் அல்லாத வெள்ளான்வகை ஊர்களே பெரும்பான்மையானவையும் தொன்மையானவையும் இருந்தன. அந்தப் பிரமதேயங்களின் இயல்புகளைப் பின்வருமாறு நிரல்படுத்துவர்:[150]

1. பிரமதேயத்தில் குடியிருந்தோரெல்லாம் மேட்டுக்குடிப் பிராமணராயிருந்தனர். குறிப்பிட்ட அளவுக்கு நிலச்சொத்து வைத்திருந்த பிராமணர்கள் மட்டுமே பிரமதேய ஊரவையின் உறுப்பினராக முடிந்தது.
2. பிரமதேய ஊர்களுக்கும் இடைக்காலச் சோழ மன்னர்களுக்கும் இடையில் மிக நெருங்கிய கொப்பூழ் உறவு இருந்தது.
3. பழைய தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு அடங்கிய சோழமண்டலத்திலும், பழைய வடவார்க்காடு, செங்கை, சித்தூர், நெல்லூர் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய செயங்கொண்ட சோழ மண்டலத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பிரமதேயங்கள் இருந்தன.
4. பிரமதேய ஊர்களெல்லாம் அரசின் உள்ளாட்சி அமைப்பில் முகாமையான பங்கை வகித்தன.

பழைய தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் அடங்கிய சோழமண்டலத்திலிருந்த வளநாடுகளில் வடுகச் சோழர் காலத்தில் விளங்கிய நாடுகளிலிருந்த பிரமதேயங்களின் எண்ணிக்கையைக் கண்டறிந்த யப்பானிய ஆய்வர்கள், அவற்றைப் பின்வருமாறு தொகுத்து வெளியிட்டுள்ளனர்:[151]

| வளநாடு | நாடு | பிரமதேயங்களின்எண்ணிக்கை |
|---|---|---|
| 1. அருண்மொழித்தேவ வளநாடு | அளநாடு | 2 |
| | ஆர்வல கூற்றம் | 2 |
| | இடையளநாடு | 2 |
| | இங்கநாடு | 2 |
| | மங்கலநாடு | 1 |
| | நென்மலிநாடு | 4 |
| | புலியூர்நாடு | 0 |
| | புறங்கரம்பைநாடு | 10 |
| | தக்களூர்நாடு | 1 |
| | வலிவலக்கூற்றம் | 0 |
| | வண்டாழை வேலூர்க் கூற்றம் | 3 |
| | ? | 11 |
| 2. சத்திரிய சிகாமணி வளநாடு | அளநாடு | 3 |
| | இங்கநாடு | 1 |
| | மருகல்நாடு | 4 |
| | பனையூர்நாடு | 1 |
| | முழையூர்நாடு | 1 |
| | பட்டினக்கூற்றம் | 9 |
| | சேற்றூர்க்கூற்றம் | 3 |
| | தேவூர்நாடு | 1 |
| | திருநறையூர்நாடு | 5 |
| | திருவாரூர்க்கூற்றம் | 1 |
| | வேளாநாடு | 1 |
| | ? | 8 |
| 3. தென்கரை (கேரளாந்தக) நாடு | சூரலூர்க்கூற்றம் | 1 |
| | தட்டைக்களநாடு | 1 |
| | உறையூர்க்கூற்றம் | 7 |
| | ? | 2 |
| 4. நித்தவிநோத வளநாடு | ஆவூர்க்கூற்றம் | 4 |
| | கந்தாரநாடு | 1 |
| | கரம்பைநாடு | 1 |
| | கிழார்க்கூற்றம் | 3 |
| | முடிச்சோழநாடு- | 2 |
| | நல்லூர்நாடு | 2 |
| | பாம்புணிக்கூற்றம் | 1 |
| | பொயிற்கூற்றம் | 0 |
| | வெண்ணிக்கூற்றம் | 4 |
| | வீரசோழவளநாடு | 0 |
| | ? | 2 |
| 5. பாண்டிய குலாசனி வளநாடு | ஆர்க்காட்டுக்கூற்றம் | 1 |
| | எயில்நாடு | 1 |
| | எரிய(எறியூர்)நாடு | 0 |
| | இடையாற்றுநாடு | 3 |
| | கிளியூர்நாடு | 0 |
| | கீழ்ச்செங்கிளிநாடு | 0 |
| | கீழ்ச்சூடிநாடு | 0 |
| | மீசெங்கிளிநாடு | 1 |
| | மீய்பொழிநாடு | 0 |
| | பனங்காடுநாடு | 0 |
| | தஞ்சாவூர்க்கூற்றம் | 0 |
| | புன்றிற்கூற்றம் | 1 |
| | புறக்கிளியூர்நாடு | 1 |
| | சுண்டைமூலைநாடு | 1 |
| | வடகவிரநாடு | 0 |
| | வடசிறுவாய்நாடு | 1 |
| | விளாநாடு | 3 |
| | ? | 4 |
| 6. தென்கரை (இராசராச) வளநாடு | ஏமப்பேர்க் கூற்றம் | 0 |
| | கீழ்வேங்கைநாடு | 1 |
| | குன்றிற்கூற்றம் | 0 |
| | பன்றியூர்நாடு | 0 |
| | பொயிற்கூற்றம் | 0 |
| | புலிவலக்கூற்றம் | 0 |
| | புன்றிற்கூற்றம் | 0 |
| | சென்னமங்கலக்கூற்றம் | 1 |
| | வரகூர்நாடு | 0 |
| | ? | 4 |
| 7. இராசேந்திரசிம்ம வளநாடு | அடிகைமங்கைநாடு | 1 |
| | அண்டாட்டுக்கூற்றம் | 3 |
| | இன்னம்பர்நாடு | 6 |
| | கார்நாடு | 1 |
| | கொண்டநாடு | 1 |
| | குறுக்கைநாடு | 4 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| | மண்ணிநாடு | 6 |
| | மிறைகூற்றம் | 2 |
| | மிழலைநாடு* | 1 |
| | நல்லாற்றூர்நாடு | 2 |
| | நாங்கூர்நாடு | 3 |
| | நெலுவூர்நாடு | 1 |
| | பிடவூர்நாடு | 1 |
| | பொய்கைநாடு | 2 |
| | திருக்கழுமலநாடு | 3 |
| | திருவாலிநாடு | 2 |
| | திருவிந்தளூர்நாடு | 3 |
| | உத்துங்கதுங்க வளநாடு (வடகரைகுன்றக்கூற்றம்) | 0 |
| | வெண்ணெய்யூர்நாடு | 5 |
| | விளத்தூர்நாடு | 1 |
| | ? | 11 |
| 8. இராசசுரிய வளநாடு | களாரக்கூற்றம் | 1 |
| | மீமலை | 2 |
| | பாச்சிற்கூற்றம் | 1 |
| | மீப்பலாறு | 0 |
| | கீழ்ப்பலாறு | 2 |
| | செம்புறை கண்டம் | 1 |
| | வடவழிநாடு | 0 |
| | வெங்கோன்குடிகண்டம் | 0 |
| | ? | 1 |
| 9. உய்யக்கொண்டான் வளநாடு | ஆக்கூர்நாடு | 3 |
| | அம்பர்நாடு | 5 |
| | குறும்பூர்நாடு | 6 |
| | மருகல்நாடு | 1 |
| | பாம்பூர்நாடு | 4 |
| | திரைமூர்நாடு | 2 |
| | திருநறையூர்நாடு | 1 |
| | திருவழுந்தூர்நாடு | 4 |
| | வெண்ணாடு | 6 |
| | விளைநாடு | 4 |
| | ? | 4 |

## அகரமும் கோயிலும்

முதல் இராசராசனின் காலத்தில் சோழமண்டலத்திலிருந்த ஒவ்வொரு நாட்டிலும் சராசரி இரண்டு மூன்று பிரமதேயங்கள் இருந்ததை மேற்போந்த அட்டவணை காட்டும்.

அரசக்கட்டளைகளின்படி அமைக்கப்பட்டமையால், அப் பிரமதேயங்களுக்கு அரசப் பாதுகாப்புத் தரப்பட்டது. அகரகாரத்துப் பிராமணர்களுக்கும் அரசனுக்கும் இடையில் மிக நெருக்கமான உறவு நிலவியது. அரசனால் விடுக்கப்பட்ட நடுவணரசு அதிகாரிகளின் முன்னிலையில், பிரமதேய ஊரவைகளின் முடிவுகள் எடுக்கப்பட்டதுண்டு.[152]

தஞ்சைக் கோயிலில் கருவூலப் பண்டாரங்களாகவும் கணக்கர்களாகவும் காவலராகவும் பிற பணியாளராகவும் பணி புரிய ஆட்களை விடுக்குமாறு பிராமண அகரங்களின் ஊரவையாருக்கு முதல் இராசராசன் விடுத்த ஆணை, அவ் வடுகச் சோழர்க்கும் அகரகாரத்திற்கும் இடையில் விளங்கிய அரத்த உறவைக் காட்டும்.[153]

அகரகாரத்துப் பிராமணர்க்குச் சொந்தமான நிலப் பங்குகளைச் சூத்திரர்களுக்கு விற்கவோ ஒற்றிவைக்கவோ கூடாது என்னும் தடையிருந்தது. அவ்வாறு விற்கவோ ஒற்றிவைக்கவோ செய்யும் பிராமணனின் பங்கு பறிக்கப்பட்டு, அவன் சாதிக் கட்டுச் செய்யப்படுவான் என்னும் கடுமையான விதி இருந்தது.[154]

ஒவ்வோர் ஊரிலும், ஊரவை இருந்தது. ஊரவை உறுப்பினர்களை ஊரார் என்றனர். நிலச்சொத்துள்ள காணியாளரே ஊரவையின் உறுப்பினராயிருந்தனர். பிராமண அகரகாரங்களில் அதைச் 'சபை' அல்லது 'மகாசபை' என்றனர். வெள்ளாண்மை, பாசனம் முதலானவற்றை ஊரவையே மேற்பார்வையிட்டது. பிராமண மந்திரங்களிலும் — குறைந்தது ஒரு பிராமண தரும சாத்திரத்திலும் — புலமை பெற்றவராக அகர ஊரவையின் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பது விதி. வடுகப் பிராமண நெறிகள் பிறர்மீது திணிக்கப்பட்டன. பிராமணர்கள் நிலத்தில் இறங்கிப் பயிர்த்தொழில் செய்யவில்லை.

நாட்டு ஆட்சியென்பது நாட்டு அவையிடம் இருந்தது. நிலவருவாயை முடிவுசெய்தல் (நாடுவகை செய்தல்), அந் நாட்டவையின் பொறுப்பாயிருந்தது. நாட்டு அவையில், பிரமதேயங்களின் பேராளராயிருந்த வந்தேறிப் பிராமணரின் கை ஓங்கி இருந்தது. பிராமண அகரங்களே வடுகச் சோழரின் ஆட்சியியல் கட்டுமானத்தின் கருக்களாக இருந்தன. பிரமதேய ஊர்கள் எண்ணிக்கையில் சிறியனவாயினும், அப் பிரமதேய ஊர்களைக் கொடையாகப் பெற்ற பிராமணர்கள் அந்த ஊரிலிருந்த பிராமணரல்லாதாரின்மீது மேலாண்மை செலுத்தி வந்தனர்.

ஊரவை ஒருபுறமும் நடுவணரசு மறுபுறமுமென இரு வகை மேற்பார்வையும் கட்டுப்பாடும் கொண்ட தேவதான நிலங்கள், கோயில் அதிகாரிகளால் நிறுவகிக்கப்பட்டுவந்தன. கோயில் பணிகளுக்காகத் தரப்பட்ட கைமாறாகவோ, கோயில் பயன்பாட்டுக்கு வேண்டிய பொருள்களைப் பெறவோ அத் தேவதான அதிகாரிகள் — ஊரவையின் இசைவோடு — கோயில் பணியாளர்க்குக் காணிப்பற்று (சீவிதம்) என்னும் காணியுரிமையை வழங்கினர். சில நேரங்களில், ஊரவையே அக் காணிகளை வழங்கியது. இது போன்ற காணிகளிலிருந்து கோயிலுக்குக் கிடைத்த உழவடையை(குடிவாரத்தை)யும்கூடக் காணிக்கடன் என்றனர். உழவடைக்கு விடப்படாத கோயில் நிலங்களைக் கோயில் கன்மிகள் என்னும் கோயில் அதிகாரிகள் நேரடியாக நிறுவகித்தனர்.

கோயிலையும் பிரமதேயத்தையும் இணைத்து வழங்கிய காணிக்கொடைகளைத் தேவதான பிரமதேயம் என்றனர். திருவிடையாட்டம், திருநாமத்துக் காணி ஆகியவற்றிலிருந்து தேவதானம் வேறுபட்டது. ஒரு நிலக்கிழாருக்குத் தன் நிலங்களின்மீது முற்றுரிமை இருந்ததைப்போல், திருவிடையாட்டத்திற்கும் திருநாமத்துக் காணிக்கும்கூட முற்றுரிமை இருந்தது. முற்றிலும் தனிச்சொத்துகளாயிருந்த காணிகளை நிலக்கிழார்களிடமிருந்தோ காணியாளரிடமிருந்தோ விலைக்கு வாங்கிக் காணியுரிமைகளையும் பேறுகளையும் கடமைகளையும் நன்கு வரையறுத்து முறையான கொடைகளாக வழங்கப்பட்டனவே திருவிடையாட்டமும் திருநாமத்துக்காணியும் ஆகும். யாருக்கும் ஒதுக்கப்பட்டிராத ஊர்ப் பொதுநிலத்தைக் கொடையாக அளித்தும்கூடச் சில நேரங்களில் திருவிடையாட்டத்தையோ திருநாமத்துக்காணியையோ உருவாக்கினர்.[155]

பல்லவர் காலத்தில் ஊட்டுப்புரைத் தேவதானம் என்னும் தேவதானமும் இருந்தது. பல்லவன் மூன்றாம் நந்திவர்மனின் (கி. பி.846–69) ஆறாவது ஆட்சியாண்டில் சன்னக்குறி யக்ஞ பட்டன் என்னும் கன்னடப் பிராமணனால் கட்டப்பட்ட கோயிலுக்குப் புழற்கோட்டத்தின் ஞாயிறுநாட்டுத் திருக்காட்டுப் பள்ளி ஊட்டுப்புரை தேவதானமாக ஆக்கப்பட்டது[156] அதற்கான ஓர் எடுத்துக் காட்டாகும்.

ஐயன்பாத்தி, மடப்புறம், அகப்பற்று, பட்டவிரித்தி, காணிப்பற்று (போகம்) எனக் கோயில் நிலங்களை உழவடைக்கு விட்டனர்.

* மிழலை நாடும் மிழலைக்கூற்றமும் அடுத்தடுத்து இருந்த இருவேறு நாடுகளாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இறை நீக்கியும், அரசனின் பங்கு குறையவில்லையே!

பயிரிடப்படாது கிடந்த நிலத்தைத் திருத்திய போதும், அந் நிலத்தை ஒருவர் ஆட்கொண்ட போதும், அந் நிலத்திலிருந்து காணிக்கடனைப் பெறும் அதிகாரம் அரசனுக்கு இருந்தது. அந்தக் காணிக்கடனைக் குறைக்கவோ தவிர்க்கவோ அரசனுக்கு உரிமை இருந்தது. கடமையைத் தண்டி அதனை அரசனுக்குச் செலுத்த வேண்டிய முழுப் பொறுப்பையும் ஊரும் நாடும் ஏற்றுக் கொண்டன. கோயில் பணிகளுக்காகவும் பிறவகை அறச்செயல்களுக்காகவும் கொடையாளி ஒருவரால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு நிலத்தையோ காசுத்தொகையையோ (வைப்பு முதலையோ) வைத்து – அதனால் வந்த விளைச்சலையோ வட்டியையோ கொண்டு — கோயில்களும் மடங்களும் செலுத்த வேண்டியிருந்த இறையை அரசனுக்குச் செலுத்தும் பொறுப்பையும் ஊரவை ஏற்றுக்கொண்டது. இறையைக் கட்டுவதற்கென ஒருவர் மூலப்பொருளாக இட்ட ஒரு தொகையை இறைக்காவலாக வைத்த காக என்றனர். (அரசனுக்கு நேரடியாகக் கட்டிய கற்பூர விலை போக) கொடையாளி ஒருவன் முதல்பணமாகத் தந்த வைப்புத்தொகையிலிருந்து வந்த வட்டிப் பணத்தை வைத்தும்கூடக் கோயிலோ பிரமதேயமோ கட்ட வேண்டியிருந்த காணிக்கடனைக் கட்டினர். காசு வடிவில் ஒரு தொகையை முதல்பணமாக வைத்துக் காணிக்கடனைக் கட்டுகின்ற உரிமையைப் பெறும் முறைக்குக் கற்பூரவிலை என்று பெயர். இந்தக் கற்பூர விலையும் இறைகாவலும் வெவ்வேறானவை.[157]

தமிழரிடமிருந்த காணிகளைப் பறித்தெடுத்தோ, விலைகொடுத்துக் கையகப்படுத்தியோ பிராமணர்க்கு வழங்கிய நிலக்கொடைகள்தாம் (land grants) பிரமதேயங்கள். வகைசெய்யப்பட்ட (assessed) மொத்த வேளாண்மை நிலங்களில் ஒரு பகுதியாகவே தேவதான அல்லது பிரமதேய நிலங்கள் இருப்பினும், அவற்றிற்கு இறை நீக்கியதால் அரசனுக்குக் கிடைக்க வேண்டிய வருவாயில் இழப்பு எதுவும் ஏற்படா வண்ணம் அந்த இறையிலி முறையை வடுக வந்தேறிகள் மிக நுட்பமாக உருவாக்கினர்.[158]

காணிகளின்மீது காராண்மையுரிமை இருந்த வணிகர்கள் வாழ்ந்துவந்த பேரூர்களே நகரங்கள் எனப்பட்டன. நகரத்தின் ஆட்சியவையை நகரங்களிலார் என்றனர். காணிக்கடன் முழுவதையோ ஒரு பகுதியையோ ஒரு நாடாள்வானுக்கோ ஆளுநனுக்கோ காணிப்பற்றாக (சீவிதமாக) வழங்கினர். போர்க்காலத்தில் அரசனுக்குப் படையூழியம் செய்ய வேண்டும் என்னும் கடப்பாடுடைய காணியாளரைக் கொண்ட ஊரையே படைப்பற்று என்றனர்.

### தீண்டாச்சேரி

(பிரமதேயமாயினும் கோயில் ஊராயினும்) ஓர் ஊருக்குள்ளேயே இறையிலி நீங்கிய நிலங்கள் சில இருந்தன. ஊரார் குடியிருந்த இருக்கை (ஊர்நத்தம்), குளம், ஊடறுத்துப்போன வாய்க்கால்கள், அம்மன் கோயில், சுடுகாடு, பறைச்சேரி, உழப்பறையர்சேரி, பறைக்குளக்குழி, ஈழச்சேரி (தீண்டாச்சேரி), கம்மாளச்சேரி, வண்ணாரச்சேரி, வெள்ளான் சுடுகாடு, பறைச்சுடுகாடு முதலியவற்றை இறைநீங்கிய நிலங்களாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவை யாவும் காணிக்கடனுக்காக அளத்தலுக்கு ஆளாகாத நிலங்களாகும். இந் நிலங்கள், எல்லா இடங்களிலும் ஒன்றே போல் இருக்கவில்லை. இவற்றில் வரும் 'தீண்டாச்சேரி' என்பது கள்ளிறக்கும் தொழிலைச் செய்துவந்தவரும், வந்தேறிகளால் தீண்டாத சாதியராக்கப்பட்டவருமான ஈழவர்கள் வாழ்ந்துவந்த ஈழச்சேரியையே குறிக்கும். பறைச்சேரியைப்பற்றிக் குறிப்பிடும் சோழர் கல்வெட்டுகள் இரண்டு. தென்னிந்தியக் கல்வெட்டுகள் எனப்படும் தொகுப்பின் இரண்டாம் பகுதி இரண்டாம் பிரிவில் வரும் 4வது 5வது கல்வெட்டுகளில் மட்டுமே அவற்றைப் பற்றிய குறிப்புகள் உண்டு.* கீழ்க்குடிகளும் உழுகுடிகளும் குடியிருந்த பகுதியே குடியிருக்கை. நீர்ப்பாசனத்திற்கான பெரும் மதகைத் திறக்கவும் மூடவும் செய்தோர் குடியிருந்த பகுதிக்குப் பெயர், தலைவாய்ச்சேரி. கோயில் பணியாளர் குடியிருந்த பகுதியே தளிச்சேரி.

தொடரும்...

---

* "...பறைச்சேரியும் குளங்களும் ஓடைகளும் இறையிலி நீங்கு நிலம்..."

"...ஊரிருக்கையும் குளமும் ஸ்ரீகோயில்களும் சுடுகாடும் பறைச்சேரியும் நாட்டா.... நிலமும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் புறவூர்க்குப் போன வாய்க்காலாலும் இறையிலி நிலம்...

"...ஊரிருக்கையுங் குளங்களும் ஸ்ரீகோயில்களும் ஈழச்சேரியும் ... க இறையிலி நீங்கு நிலம்."

"...ஊரிருக்கையும் குளமும் ஸ்ரீகோயில்களும் சுடுகாடும் ஈழச்சேரியும் கம்மாணச்சேரியும் பறைச்சேரியும் வண்ணாரச்சேரியும் பறைக்குளக் குழியும்..."

"...ஊர்நத்தமும் குளங்களும் புலத்தில் குளங்களும் தீண்டாச்சேரியும் பறைச்சேரியும் சுடுகாடும் ஆகி இறையிலி நிலம்..."

"...ஊரிருக்கையும் ஸ்ரீகோயில்களாலும் திருமுற்றங்களாலும் திருநந்தவனங்களாலும் பறைச்சேரியாலும் சுடுகாடும் ஆக இறையிலி நீங்குநிலம்...

"...ஊர்நத்தமும் ... வாய்க்கால்களும் பறைச்சேரியும் கம்மாணச்சேரியும் சுடுகாடும் உள்ளிட்டு இறையிலி நிலங்களும்..."

"...ஈழச்சேரியும் பறைச்சேரியும் வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும் கற்கிடையும் ஆக இறையிலி நீங்கு நிலம்..."

"...கோயிலும் திருமுற்றமும் இவ்வூர் மகாதேவர் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் இத் தேவர் திருமஞ்சனக்குளத்தாலும் பறைச்சேரியாலும் வெள்ளான் சுடுகாட்டாலும் பறைச்சுடுகாட்டாலும் ஆக இறையிலி நீங்கு நிலம்..."

"...பிடாரிக் கோயிலும் திருமுற்றமும் ஊருணிக்குளமும் கரையும் ஐயன் கோயிலும் திருமுற்றமும் கொட்டகாரமும் வெள்ளாளன் சுடுகாடும் பறைச்சுடுகாடும் பறைச்சேரியும் ஈழச்சேரியும் ஆக இறையிலி நீங்கு நிலம்..."

"...ஊர்நத்தமும் ஈழச்சேரியும் கொட்டகாரமும் பறைச்சேரியுமாக இறையில் நீங்கு நிலம்..."

"....ஊரிருக்கையும் இவ்வூர்க் குளமும் கம்மாணச்சேரியும் இவ்வூர்ப் பறைச்சேரியும் இவ்வூர் அகையாறும் ஆக இறையிலி நீங்குந் நிலம்..."

"...ஊர்நத்தமும் குடியிருக்கையும் பறைச்சேரியும் இவ்வூரை ஊடறுத்துப்போய்ப் புறவூர்க்குப் பாயும் வாய்க்கால் கண்ணன் வாய்க்கால் நீரோடு காலாலும் இவ்வூர் ஊர்க்களத்தாலும் இவ்வூர்க் குளமும் கரையும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் இத் தேவர் திருமஞ்சனக்குளமும் ஆக இறையிலி நீங்கு நிலம்..."

"...ஊர்நத்தமும் குடியிருக்கையும் ஊருணிக்குளமும் [கு]ன்றுமேயப் பாழாகக் கிடந்த நிலமும் கண்மாணச்சேரிக் குடியிருக்கையும் பிடாரி கோயிலும் திருமுற்றமும் வெள்ளான் சுடுகாட்டுக்குப் போம் வழியும் வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும் களமாய்க் கிடந்த நிலமும் ஐயன் கோயிலும் திருமுற்றமும் உழப்பறையரிருக்கும் கீழைச்சேரியும் பெருவ... கரையும் உழப்பறையர் இருக்கும் மேலைப்பறைச் சேரியும் இவ்வூர் நிலத்தாறையூடறுத்துப்போன நாட்டார் வாய்க்காலும் ஆக இறை நீங்கு நிலம்...

"...ஊரிருக்கையும் ஊர்க்களமும் இவ் வூர்க்காளர் பிடாரியார் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் பிடாரியாரிது தெங்குமரம் நின்ற நந்தவனமும் இவ்வூரை ஊடறுத்துப்புறவூர்களுக்கு நீர் பாயும் வாய்க்கால்களாலும் ஈழச்சேரியும் வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும் பறைச்சேரியும் ஆக இறையிலி நீங்கு நிலம்..."

"...இவ்வூர் நத்தமும் களமும் வெள்ளான் சுடுகாடும் பிடாரி திருவாலுடையான் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் காடுகாள் கோயிலும் திருமுற்றமும் ஈழச்சேரியும் கம்மாணச்சேரியும் பறைச்சேரியும் பறையர் சுடுகாடும் ஆக இறையிலி நீங்கு நிலன்..."

"...ஊரிருக்கையும் கொட்டகாரமும் மாதேவர் இருந்த திடலும் கண்ணன் வாய் நின்றும் இவ்வூர் நிலத்தாறே குறங்கறுத்துப் பாயும் வாய்க்காலும் வெள்ளான் சுடுகாடும் கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(தமிழ் மண்ணில் பொறுக்கித் தின்னும் ஒரு கூட்டத்தின் கைகளில் செய்தி ஊடகங்கள் சிக்கிக் கொண்டுள்ளன. தமிழை அழிப்பதிலும், தமிழரைத் தாழ்த்துவதிலும் தினமலர் செய்யும் தந்திரங்கள் ஏராளம்.!)

# மலரல்ல மலமடா!

பொறி அமலன்

என் தமிழ்த் தோழா!
இன்று காலையில்
என் இல்லக் கதவினைத்
திறந்திட்ட போது
வாயிற்படியினில் .... மலம்!

எவனடா அவன்
என் வீட்டு வாயிலில்
இதனைப் போட்டவன்?

வாயின் வழியாய்
வயிற்றுக்குள் இருப்பவை
வெளிவரத் துடித்தன
உவ் ... வே ...!

எட்டி நின்றேன் ...
"இவ்ளோதான் இந்தியா"
"நம்மூரு சைடு"
"டீக்கடை பெஞ்சு"
"அரிசொரி"
"நோட்டீஸ் போர்டு"
"செக்கண்ட் பிரண்டு பேஜ்"

பெருத்த புழுக்கள்
நெளிந்தன அதனில் ...

துடைப்பம் எடுத்துத்
துடைத்து எறிந்திடத்
துணிந்திட்ட போது...
சிறுவர் மலமும்
அதனிடைக் கிடந்தது...!

உற்றுப் பார்த்தேன்
சீச்சீ .... சீச்சீ
சகிக்க முடியாப்
பிணநாற்றம் அதனில்....

சிறுவர் மலத்தில்
பெரும் பெரும் புழுக்கள்
"ஐயப்பன்"
"ஆவிப்பெண் ஆனந்தி"
"குட்டீஸ் கார்னர்"
"அலாவுதீனும் அற்புத விளக்கும்"
"எலிகள் பூனைகள் கிளீனாக இருக்க"
"டிடெக்டிவ் டினோ"
"கிளி மிஸ்"
"முகமூடிப் பேய்"
"கரெக்ட் கொஸ்டின்"
"நாட்டி நாஷன்"
நச்சுப் புழுக்கள்
நெளிந்தன, ஊர்ந்தன!

புழுத்து நாறும் இழிவான அதனை
நச்சுக் கொல்லித் தைலத்தை ஊற்றி
வாளி வாளியாய் நீரினைக் கொட்டித்
தூய்மைப்படுத்தினேன் வாயிற்படியை.




என் தமிழ்த் தோழா!
நம் தமிழ்த் தளிர்களின்
உள்ளத்தில் நஞ்சை
மெல்ல மெல்ல புகட்டி
மழலையர் மூளையைக் கழுவி
முடக்கிப் போட்டிடும்
வடுகப் பார்ப்பனத்
திமிரினைப் பாரடா!
தமிழர்நம் நாட்டில்
தமிழில் அச்சிடும்
பார்ப்பன இதழ்களின்
சூழ்ச்சிகள் அறியடா!
தமிழைக் கெடுத்துத்
தமிழினம் அழிக்க
சிண்டுகள் செய்யும்
சேட்டைகள் பாரடா!
பூணூல் விலங்குகள்
பூண்டோடு இற்றிட
போரிடக் கிளம்படா!
பார்ப்பனப் பதர்களின்
இதழ்களை விலக்கடா!
அவை மலரே அல்லடா
அவை பா[illegible] மலமேதானடா!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செத்த மொழியின் கையில் வெத்திலைப் பாக்கு!

## பள்ளிகளில் சமற்கிருதம் வரப்போகிறது!!



சமற்கிருதம் தேவ மொழியும் கிடையாது. தேவையுள்ள மொழியும் கிடையாது. இலக்கணமும், இலக்கியங்களும் இல்லாத ஒரு நாடோடி இன மக்களின் சில ஒலிக்குறியீடுகளே சமற்கிருதம் எனும் பெயர் பெற்றது. பின்னாளில் தமிழின் துணையோடு இது சில இலக்கண வடிவங்களைப் பெற்றுக் கொண்டது. மெல்ல மெல்ல இம்மொழி செத்துப் போனது. வழக்கில் இல்லாத இந்த மொழிக்கு திடீரென உயிர் கொடுக்க கமுக்கமாக நடுவணரசும், தமிழக அரசும் தங்களது கல்வித்துறை வழியாக ஆணைகளைப் பிறப்பித்து வருகின்றன.

பொது மக்கள் பார்க்கவே விரும்பாத தூரதருசன் எனும் இந்தியத் தொல்லைக் காட்சியில் சில ஆண்டுகளுக்கு முன்பாக சமற்கிருதத்தில் செய்தி என்று புகுத்த ஆரம்பித்தனர். இப்போது கல்விக்கூடங்கள் வழியாக இம்முயற்சி நடக்கிறது.

நடுவணரசின் உதவியோடு சமற்கிருதம் கற்பிக்கும் பள்ளிகளின் முயற்சிக்கு 100 விழுக்காடு பொருளுதவி செய்யவிருப்பதாக அவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து விரிவான பரப்புரை செய்யும்படி கல்வி நிறுவனங்கள் பணிக்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வி இயக்குனர், சென்னை 6 என்ற முகவரியிலிருந்து, ஆணை எண் 110299-டி1-99 23.09.99 நாளிட்டது எல்லா பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

சமற்கிருத கல்வி வளர்ச்சிக்காக 100 விழுக்காடு பொருளுதவி குறித்து விளம்பரம் செய்யவதுதான் இவ்வாணையின் சாரம்.

1. சமற்கிருதம் கற்பிக்கும் மேநிலைப் பள்ளிகளுக்கு வசதிகள் செய்து கொடுப்பது.

2. சமற்கிருதத்தை தரப்படுத்துவது

3. சமற்கிருத ஆய்வுகளுக்கும், ஆய்வுத் திட்டங்களுக்கும் மாநில அரசு குவை (நிதி) ஒதுக்கீடு செய்வது

4. நடுவணரசின் பல்கலைக் கழக நன்கொடைகள் தொடர்பாக

என்று எல்லா வகையிலும் மாநில மற்றும் நடுவணரசின் நிதி செலவிடப்பட்டு இச் செத்த மொழிக்கு சாரம் கட்டி தூக்கி நிறுத்த முயற்சி நடக்கிறது.

இந்த ஆணை தமிழகமெங்கும் உள்ள பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அனுப்பப்பட்டு சமற்கிருதம் பயில விரும்பும் மாணவ மாணவியரின் பட்டியல் கேட்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட சாதி மாணவர்களை ஊக்குவிக்கவும், சமற்கிருத மொழியைத் தமிழகத்தில் தேவையின்றி புகுத்தவும் திட்டமிட்டு நடைபெறும் செயல் இது!

ஆறு கோடித் தமிழ் மக்களின் தாய்மொழியாம் தமிழை வாழ்விக்க நாம் படாத பாடு பட்டுக் கொண்டிருக்கும்போது செத்துப் போன ஒரு மொழியான சமற்கிருதம் சில நிறவெறியரின் மொழி என்பதற்காக திட்டமிட்டு புகுத்தப்படுகிறது. அதையும் அரசு ஆணைகள் வழியாக பள்ளிக் கல்வித்திட்டத்தின் வழியாக புகுத்துவது கொடுமையிலும் கொடுமை.

தமிழை வாழ்விக்கவும், வளர்க்கவும் வேண்டிய தமிழக அரசு அதை விடுத்து, செத்த சவங்களைத் தூக்கிச் சுமக்கும் வேலையில் இறங்கியுள்ளது. கருணாநிதியின் அரசு முழுக்க ஆர். எஸ். எஸ் சேற்றில் விழுந்துவிட்டது என்பதற்கு இனியும் சான்றுகள் வேண்டுமோ?□